அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


நக்கல்நமசிவாயம்





மலர் : 01, இதழ் : 41 சார்வரி வருடம், ஆவணி மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை (17.08.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-26, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20


## - அரசியலமைப்பில் அதிரடியாக திருத்தங்களை செய்யத் தயாராகும் அரசு -

# காணாமல்போனோர் ஆணைக்குழு முடங்கும்!



★ சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் குறைப்பு

★ ஜனாதிபதி பதவிக்காலம் அதிகரிக்கப்படாது

★ இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடலாம்

● *நமது அரசியல் செய்தியாளர்*

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வதற்கான 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கான யோசனைகள் புதிய அரசின் இரண்டாவது அமைச்சரவை கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அதன் பின்னர் வரும் எட்டு வாரங்களில் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போதைக்கு அரசியலமைப்பில் இந்தளவு திருத்தங்களே மேற்கொள்ளப்படும். அதன்பின்னர் இரண்டு வருட காலங்களுக்குள் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படவுள்ளது. இந்த அரசியலமைப்பு திருத்தங்களுக்கான அடிப்படை சட்டவரைபுகளை தயாரிக்கும் பணியில் நீதி அமைச்சர் அலி சப்ரி ஈடுபட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்ட கையோடு 18ஆம் திருத்தம் உடனடியாக இயல்பாகவே அமுலுக்கு வரும். அதிலும் சில முக்கிய ஷரத்துகள் திருத்தப்படவுள்ளன. 02

## பிரிவினைவாத சிந்தனைக்கு புலம்பெயர்ந்த தமிழர் நிதியுதவியளிப்பது தடைசெய்யப்பட வேண்டும்!

### பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ன தெரிவிப்பு



நாட்டின் அபிவிருத்திற்கு தேசிய பாதுகாப்பு மிக முக்கியமான ஒன்றாக காணப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன தெரிவித்தார்.

அவற்றை பாதுகாக்காமல் ஒரு நாட்டை முன்னேற்றவும் அபிவிருத்தி செய்வதும் சாத்தியமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டிற்கு தேவையான நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் தேசிய பாதுகாப்பின் அவசியத்தையும் பாதுகாப்புச் செயலாளர் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்துவதே நாட்டின் அபிவிருத்தி இலக்கை நோக்கிய திசையாகும்... 02

## அதிருப்தியடைந்த அமைச்சர்களுக்கு ஜனாதிபதி தொலைபேசி அழைப்பு!



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகள் குறித்து திருப்தியடையாத அமைச்சர்களுக்கு தனிப்பட்ட வகையில் தொலைபேசி அழைப்பெடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயபொறுப்புகள் தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

தயாசிறி ஜயசேகர, லொஹான் ரத்வத்த, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் உள்ளிட்ட இன்னும் சிலருக்கு ஜனாதிபதி... 02

## யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களை இரவு பத்து மணிவரை திறந்துவைக்க பணிப்புரை

### அரசின் முடிவால் வர்த்தகர்கள் அதிருப்தி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களை இரவு பத்துமணி வரை திறந்துவைக்குமாறு அரசு விடுத்துள்ள பணிப்புரையால் மாவட்ட வர்த்தகர்கள் அதிருப்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகளை சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், இரவு பத்துமணிவரை கடைகளை திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டிருந்தார். கொழும்பிலிருந்து இதற்கான உத்தரவு வந்திருப்பதாகவே அங்கு கூறப்பட்டது.

ஆனால் இரவு பத்துமணிவரை புடவைக்கடைகள், நகை விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள் என்பவற்றை திறந்துவைத்தாலும் அவற்றில் வேலைசெய்யும் ஊழியர்கள் வீடு செல்வது, வாடிக்கையாளர்களின் வருகை போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டுமென வர்த்தக சங்க பிரதிநிதிகள் மாகாண.... 02

## மட்டக்களப்பு நகர் நகைக்கடை கொள்ளை

### மேலும் ஒருவர் கைது - நகைகள் சிலவும் மீட்பு

● *கனகராசா சரவணன்*

மட்டக்களப்பு நகரில் பிரபல நகைக்கடையொன்றை உடைத்து 8 கிலோ கொண்ட 10 கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பாக குறித்த கடையில் பணியாற்றிய முகாமையாளர் ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் 88 கிராம் 400 மில்லிகிராம் நகைகள் மீட்கப்பட்டதுடன் 2 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நகைக் கடை, இம்மாதம் முதலாம் திகதி... 02

## சிறுவனை தடுத்து வைத்து சித்திரவதை

### மாத்தறையில் ஐவருக்கு விளக்கமறியல்



மாத்தறை, மிரிஸ்ஸ பகுதியில் சிறுவன் ஒருவனை படகில் 48 நாட்கள் தடுத்துவைத்து சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 5 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 5 பேரும் மாத்தறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்த... 02

## ஒற்றுமை தொடர்ந்தால் இரட்டிப்பு வெற்றி

### - புத்தளத்தில் ரிஷாட்



கட்சி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால், புத்தளம் வாழ் மக்கள் ஒன்றுபட்டதன் காரணமாகவே, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாம் இழந்த பிரதிநிதித்துவத்தை பெறமுடிந்ததென்றும், இனிவரும் காலங்களிலும் இவ்வாறு ஒற்றுமையுடன் செயற்பட்டால் இதைவிட பாரிய வெற்றிகளைப் பெறமுடியும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.... 02

## நாடாளுமன்றம் செல்லவென தவிசாளர் பதவியிலிருந்து கலையரசன் இராஜினாமா!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சர்ச்சைக்கு மத்தியில் தெரிவாகியிருக்கும் நாவிதன்வெளி பிரதேசசபைத் தவிசாளர் தவராசா கலையரசன் தனது தவிசாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம்... 02

## அரசியலமைப்புத் திருத்தங்கள் நிறைவடைந்தவுடன் மைத்ரிக்கு கெபினட் அந்தஸ்துள்ள அமைச்சு



அரசியலமைப்புத் திருத்த நடவடிக்கைகள் இன்னும் சில வாரங்களில் நிறைவடையவுள்ளன.

இந்நிலையில் அரசியலமைப்புத் திருத்தங்கள் நிறைவுக்கு வந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள... 02

## யாழில் முன்னாள் போராளிகளின் விபரங்கள் படையினரால் சேகரிப்பு

### மக்களிடையே அச்சம் தொற்றியது

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்ற இராணுவத்தினர் முன்னாள் போராளிகளின் விபரங்களை சேகரித்துள்ளனர்.

கீரிமலை பகுதியின் ஜே/226, ஜே/225 ஆகிய பிரதேசங்களில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அனைத்து வீடுகளுக்கும் சென்ற இராணுவத்தினர் குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள், அவரது அடையாள அட்டை ஆகியவற்றை சோதனை செய்தனர்.

அத்துடன் வீடுகளில் முன்னாள் போராளிகள் யாராவது இருக்கின்றனரா என்ற விபரங்களை அளிக்குமாறும் கூறி வருகின்றனர்.

முன்னாள் போராளிகள் என்று யாராவது இருந்தால் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

என்ன காரணத்திற்காக முன்னாள் போராளிகளின்.... 02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 1003 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 07ஆம் திகதி | ஆங்கில எழுத்து B | 12 44 49 50 |
| சனிதா வாசனா | 3348 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 08ஆம் திகதி | ஆங்கில எழுத்து T | 12 18 35 66 |
| அத கோட்டிபதி | 1004 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 08ஆம் திகதி | ஆங்கில எழுத்து W | 16 47 59 69 |
| சுப்பர் போல் | 1188 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 08ஆம் திகதி | ஆங்கில எழுத்து B | 03 28 31 54 |
| கோட்டிபதி கப்ருக | 609 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 09ஆம் திகதி | ஆங்கில எழுத்து K | 09 15 16 76 |
| சுப்பர் போல் | 1189 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 09ஆம் திகதி | ஆங்கில எழுத்து P | 06 50 59 77 |
| அத கோட்டிபதி | 1005 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 09ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 24 57 62 66 |
| அத கோட்டிபதி | 1006 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 10ஆம் திகதி | ஆங்கில எழுத்து V | 06 18 54 60 |
| சனிதா வாசனா | 3349 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 10ஆம் திகதி | ஆங்கில எழுத்து T | 37 41 53 56 |
| சுப்பர் போல் | 1190 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 10ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 21 41 49 75 |
| கோட்டிபதி கப்ருக | 610 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 11ஆம் திகதி | ஆங்கில எழுத்து V | 08 13 69 75 |
| அத கோட்டிபதி | 1007 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 11ஆம் திகதி | ஆங்கில எழுத்து L | 25 29 48 65 |
| அத கோட்டிபதி | 1008 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 12ஆம் திகதி | ஆங்கில எழுத்து V | 43 51 57 68 |
| சனிதா வாசனா | 3350 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 12ஆம் திகதி | ஆங்கில எழுத்து P | 03 27 57 60 |

# பசறை – எல்டப் தோட்டத்தில் குளவி கொட்டியதில் 8பேர் பாதிப்பு

(பதுளை)

தேயிலை பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் 8 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பசறை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். பசறை பகுதியைச் சேர்ந்த எல்டப் பெருந்தோட்ட கீழ்ப்பிரிவிலேயே நேற்று மாலை மேற்படி குளவிக்கொட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

4 ஆண்களும், 4 பெண்களுமே குளவித் தாக்குதலுக்குள்ளாகியதுடன், மூவர் ஆபத்தான நிலையிலுள்ளனரென்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மரமொன்றிலிருந்து குளவிக்கூடு கலைந்து கடமைகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை தாக்கியுள்ளது. இதனையடுத்து, ஏனைய தொழிலாளர்களில் சிலர் தீ மூட்டி புகையை எழுப்பியதனால், குளவிகள் பறந்து சென்றதன் பின்னர், குளவிக்கொட்டலுக்குள்ளான 8 பேரும் வாகனமொன்றில், பசறை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# முள்ளிவாய்க்காலை வைத்து போலித்தேசியம் பேசி மக்களை ஏமாற்றுகின்றனர்

## வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

போலித் தேசியம் பேசிவருபவர்கள் முள்ளிவாய்க்காலை வைத்து அரசியல் செய்து மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றனர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் என்ற புனித பூமியை தங்களது சுய அரசியலுக்காக கொச்சைப்படுத்த வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவாலயம் சென்று சில அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்வது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் போலித் தேசியம் பேசும் சில அரசியல் கட்சிகள் தாம் முள்ளிவாய்க்கால் மண்ணில் சத்தியப்பிரமாணம் செய்வதாகக்கூறி மக்களை முட்டாளாக்கி வருகின்றனர். முள்ளிவாய்க்கால் என்பது இறுதி யுத்தத்தின்போது உயிரிழந்த உறவுகளின் நினைவாக வாழ்ந்துகொண்டிருக்கும் உறவுகள் ஒன்றுகூடி நினைவுகூரும் ஒரு புனிதமான பிரதேசமாகும். அவ்வாறான புனிதமான பிரதேசத்தை தங்களது சுயநல அரசியலுக்காக பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இலங்கையில் முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது தற்போது போலித் தேசியம் பேசுபவர்கள் எங்கு இருந்தார்கள்? இவர்கள் மக்களுடன் மக்களாக இருக்கவில்லை. மாறாக தங்களது பணியிலும் வெளிநாடுகளிலும் இருந்துவிட்டு இப்போது முள்ளிவாய்க்காலில் வந்து தங்களது போலித்தேசிய அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்வதாகக் கூறும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள சத்தியப் பிரமாண நிகழ்வில் இலங்கை அரசியலமைப்பை பேணிப் பாதுகாப்பேன் என்று உறுதிமொழி எடுக்கவுள்ளனர்.

குறிப்பாக அரசியலமைப்பின் இரண்டாம் உறுப்புரையில் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, ஒற்றையாட்சியை பேணிப் பாதுகாப்போம் என்று அவர்கள் உறுதி உரை எடுக்கவுள்ளனர். பின்னர் இங்கு மக்கள் மத்தியில் பொய்களைக் கூறி அவர்களை மறுபடியும் ஏமாற்றும் படலத்தை தொடர்ந்து வருகின்றனர்" என்றார்.

முதலாம் பக்கத்தொடர்ச்சி...

## யாழ்ப்பாண...

ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளதால், எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்போவதாக அமைச்சர் தெரிவித்ததாக அறியமுடிந்தது.

## சிறுவனை தடுத்து...

நிலையில், அவர்களை 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிரிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த மீன்பிடி படகு உரிமையாளர் உட்பட மேலும் நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஒற்றுமை தொடர்ந்தால்...

தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம், வேப்பமடுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நடந்து முடிந்த பொதுத்தேர்தல், புத்தளம் சிறுபான்மை மக்களுக்கு நல்லதொரு செய்தியைக் கூறுகின்றது. பெரும்பான்மையின கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி ஆகியவற்றின் பின்னால், நாம் பிரிந்து நின்று அரசியல் செய்ததனாலேயே, 30 வருடங்களுக்கு மேலாக பிரதிநிதித்துவத்தை இழந்து தவித்தோம். சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் பின்னடைவு அடைந்தோம். பல்வேறு அநியாயங்கள் எமது சமூகத்துக்கு இழைக்கப்பட்டன.

அனல் மின்சாரம், சீமெந்து தொழிற்சாலை, அறுவைக்காடு போன்றவைகளால் புத்தளம் பிரதேசத்தை நாசம் செய்தனர். அபிவிருத்தியிலும் பின்தள்ளப்பட்டோம். நமக்கென்று நாடாளுமன்றப் பிரதிநிதியொருவர் இல்லாததனாலேயே இந்த இழிநிலை ஏற்பட்டது.

எனவே, இதனை அடைய வேண்டுமென்ற முயற்சியில் "அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்" நீண்டகாலமாக ஈடுபட்டது. பல்வேறு தியாகங்களைச் செய்தோம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரவூப் ஹக்கீமும் இதற்கு உடன்பாடு கண்டார். எல்லோரும் ஒன்றுசேர்ந்து கூட்டமைப்பை உருவாக்கியதனாலேயே, நாம் இந்த வெற்றியைப் பெறமுடிந்தது. ரணில், சஜித், மஹிந்த ஆகிய தலைவர்கள், இன்று புத்தளம் தொகுதியில் தமது பார்வையை செலுத்தும் நிலையை உருவாக்கியதற்கு காரணம் நமது ஒற்றுமையே ஆகும். 30 நாட்களில் உருவாக்கிய இந்தக் கூட்டமைப்பு, 31 வருடங்களுக்கு மேலாக இழந்திருந்த பிரதிநிதித்துவத்தை பெற்றுத்தந்துள்ளது. நாம் எந்தக் கட்சி ஆதரவாளர்களாக இருந்தாலும் சமூகத்தைப் பற்றி சிந்திப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம். இறைவன் தந்த வாக்கு பலத்தை ஒற்றுமையுடன் சரியாகப் பயன்படுத்தினால் பாரிய வெற்றியீட்ட முடியும்.

புத்தள சரித்திரத்தில், கூட்டமைப்பின் உதவியினாலும் மக்களின் ஒற்றுமையினாலும் வரலாறு படைத்துள்ள, கூட்டமைப்பின் மூலம் தெரிவான அலி சப்ரி ரஹீம் சமூக வாஞ்சை கொண்டவர். தமது சொந்தப் பணத்தில் மக்களுக்கு பணிபுரியும் நல்லுள்ளம் படைத்தவர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இந்த மாவட்டத்தில் தழைத்தோங்க வித்திட்டவர். இப்போது அவர் உங்கள் பலத்தினால் எம்.பி.யாகியுள்ளார். இந்தத் தேர்தலில் அனைத்துக் கட்சியினரதும் வாக்குகள், தியாகம், உழைப்பு இருந்ததனால்தான்



அலி சப்ரி வெற்றிபெற்றார். அவரைப் பொறுத்தவரையில், எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பக்குவமும் பண்பும் நிறையவே இருக்கின்றது. நீங்கள் தொடர்ந்தும் அவரின் கரங்களைப் பலப்படுத்தி, இந்த மண்ணின் தேவைகளைப் பெற்றுக்கொள்ள ஒத்துழையுங்கள்" என்றார்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீம் மற்றும் மன்னார் பிரதேச சபை தலைவர் முஜாஹிர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஊர் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அரசியலமைப்பு திருத்த...

அமைச்சு கிடைக்கப்பெறும் என்றும் அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. 19ஆவது அரசியலமைப்பை நீக்கியதும் அமைச்சரவை நியமனங்களில் காணப்படும் வரையறையும் இயல்பாக நீங்கிவிடும். ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தை போன்று பாரியளவான அமைச்சர்களை நியமிப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஈடுபாடின்மையினால் மைத்ரிபால சிறிசேன உள்ளிட்ட மேலும் இருவருக்கு மட்டும் அமைச்சுப் பதவிகள் கிடைக்குமென்று அந்த தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசாங்கத்தரப்பின் முக்கியஸ்தர்கள் அறிவித்துள்ளனர்.

## அதிருப்தியடைந்த...

இவ்வாறு தொலைபேசி அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

அந்தந்த விடயப் பொறுப்புகளுடன் தொடர்புடையவர்களுக்கு அமைச்சுகள் தொடர்பாக தெளிவினை சம்பந்தப்பட்ட சமூகத்துக்கு வழங்கும் நோக்கத்துடன் இந்த அமைச்சு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சுகளால் ஆக்கபூர்வமான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமென்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பு...

சனிக்கிழமை உடைக்கப்பட்டு கடையினுள் இருந்த தங்க ஆபரணங்கள் வைக்கப்பட்ட பாதுகாப்பு பெட்டகத்தை திறந்து அதிலிருந்த 10 கோடி ரூபா பெறுமதியான சுமார் 8 கிலோ தங்க ஆபரணங்களும் 4 இலட்சத்து 47 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை (14) திகதி எதிர் நகைக் கடை உரிமையாளர் அவரது மனைவி, மற்றும் எதிர் நகைக் கடை உரிமையாளரின் கலஹா நண்பனான நகைக்கடை ஒன்றின் உரிமையாளருமாக 3 பேரை கைதுசெய்து கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் மீட்டனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட 3 பேரையும் பொலிஸ் தடுப்பு காவலில் விசாரணை செய்வதற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை நீதிமன்ற அனுமதியினை பெற்று தடுப்புக் காவலில் வைத்து கைதானவர்களிடம் விசாரணையை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதனையடுத்து கலஹா வில் மேலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த 88 கிராம் 400 மில்லிகிராம் தங்க ஆபரணங்கள் மற்றும் 2 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பணத்தையும் மீட்டனர்.

குறித்த நகைக் கடையின் பாதுகாப்பு பெட்டகத்தின் திறப்பை கொள்ளையருக்கு வழங்கிய அந்த கடையின் முகாமையாளரை கைதுசெய்ததுடன் பாதுகாப்பு பெட்டகத்தின் திறப்பையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 4 பேரையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (16) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## பிரிவினைவாத...

என தெரிவித்த அவர், செழிப்பு மற்றும் பிரகாசமான எதிர்காலம் எனும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை சுட்டிக்காட்டினார்.

"ஹரிமக அமைப்பினால்" "கொவிட்-19 க்கு பின்னரான மறுமலர்ச்சி - இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்கால வளர்ச்சி" எனும் தொனிப்பொருளில் இலங்கை பவுண்டேசன் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் கூறியதாவது,

2009ஆம் ஆண்டு பிரிவினைவாதம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருந்த போதும், ஒரு சில தமிழ் புலம்பெயர்ந்தோர் பிரிவினைவாத சிந்தனைக்கு தொடர்ச்சியாக நிதியுதவியளிப்பதை நாம் தடைசெய்ய வேண்டும்.

போருக்குப் பின்னரான காலங்களில் எல்.ரீ.ரீ.ஈ. முன்னாள் போராளிகள் 12,242 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் சில மீதமுள்ள அமைப்புக்கள் நிதி சேகரிக்கும் நோக்கில் அவர்களின் பிரிவினைவாத சிந்தனையை தூண்டி அதற்கு மேலும் உரமூட்டும் வகையில் செயற்படுகின்றன. இந்நாட்டில் ஒருபோதும் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன்.

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் குறித்து புலனாய்வு அமைப்புகளுக்கு 97 முறை முன்கூட்டியே எச்சரிக்கைகள் கிடைத்தபோதும், பொறுப்பானவர்கள் அதன் பாரதூரமான விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இதனால் சுமார் 500 பேர் காயமடைவதை தடுக்கவும் சுமார் 290 க்கும் மேற்பட்டவர்களின் உயிரிழப்புகளைத் தடுக்கவும் தவறிவிட்டனர்.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நலன்புரி நடவடிக்கைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், அளவுக்கதிகமாக காணப்படும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கைகளை குறைப்பது தொடர்பாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளோர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு முன்னெடுப்புக்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதற்கமைய 1000 பேருக்கு புனர்வாழ்வளிக்கும் வசதிகளைக் கொண்ட விஷேட நிலையம் ஒன்று நிட்டம்புவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 2,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கும் வசதிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று வீரவில பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வு, விஷேடமாக மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான நில ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்துவதற்கான திட்டங்கள் உள்ளன.

பொதுமக்களினால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக முறையான விசாரணைகளை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இதற்கான விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் கட்டளைத்தளபதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய, மற்றும் ஹரிமக நிறுவனத்தின் தலைவர் கனிஷ்க டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்றம்...

செய்வதற்கு முன் சட்டப்படி தற்போதைய தவிசாளர் பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என்பதற்காக அவர் இவ்வாறு இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தோல்வியடைந்தது மாத்திரமல்லாமல் தமிழ்ப்பிரதிநிதித்துவமும் இழக்கப்பட்டிருந்தது. அதனால் த.தே.கூட்டமைப்புக்கு கிடைத்திருந்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தை பலத்த உட்கட்சி சர்ச்சைக்கு மத்தியில் கலையரசனுக்கு கட்சி வழங்கியிருந்தமை தெரிந்ததே.

கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான கலையரசன் நாவிதன்வெளி பிரதேசசபைக்கு இடம்பெற்ற 2006 உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு உதவி தவிசாளராகத் தெரிவானார். பின்னர் 2008 இல் தவிசாளரானார். மீண்டும் 2018 உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தவிசாளரானார். அந்த பதவியையே அவர் தற்போது இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 2015 பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இ.த.அ.கட்சி சார்பில் போட்டியிட்ட க.கோடீஸ்வரன் 17799வாக்குகளைப்பெற்று தெரிவானார். அடுத்த அதிகூடிய 14723 வாக்குகளைப்பெற்றவர் த.கலையரசன்.

இம்முறை த.அ.கட்சி எந்த ஆசனத்தையும் பெறவில்லை. ஆதலால் வேட்பாளர்களது விருப்புவாக்குகள் வெளியாகவில்லை. எனினும் உத்தியோகப்பற்றற்ற தகவலின்படி அதிகூடிய விருப்பு வாக்குகளை இம்முறை கலையரசனே பெற்றுள்ளதாகக்கூறப்படுகிறது. எனினும் கட்சி போதிய வாக்குகளைப் பெறாமையினால் ஆசனம் இழக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் முன்னாள்...

விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என அப்பகுதி மக்கள் வீட்டிற்கு வந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது அதுபற்றி எதுவும் கூற முடியாது எமக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது என்று படையினர் அவ்விடத்து மக்களிடம் கூறி உள்ளனர்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் மீண்டும் முன்னாள் போராளிகளின் விபரங்களை இராணுவத்தினர் சேகரிக்க தொடங்கியுள்ளமை முன்னாள் போராளிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, அண்மைய வாரங்களில் யாழ் குடாநாட்டில் பரவலாக முன்னாள் போராளிகளின் விபரங்கள் கிராமசேவகர்கள் ஊடாக மீள இராணுவத்தால் திரட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## அரசியலமைப்பில்...

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும். என்றாலும் 20 ஆவது திருத்தத்தின் மூலமும் அது (19 ஆம் திருத்தத்தின் பிரகாரம்) ஐந்து வருடங்களுக்கு வரையறுக்கப்படும். 19 ஆவது திருத்தத்தில் இருந்ததுபோலவே ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் தடவைகள் இரண்டென வரையறுக்கும் சரத்தும் 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்படவுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் முற்றாக மாற்றங்களுக்கு உட்படுத்தப்படவுள்ளன. அரசின் உயர்பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்கும் வகையில் அரசியலமைப்பு பேரவையின் கட்டமைப்பும் மாற்றப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தின்படி அரசியலமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் அமைகின்றன. அதன்படி அந்த பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும்போது கூடுதல் பொறுப்பு ஜனாதிபதியை சார்கிறது. சுயாதீன ஆணைக்குழுக்கள் முழுமையாக இல்லாமலாக்கப்படாது. தகவலறியும் சட்டமூலத்தில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது. ஆனாலும் காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் விசேட தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக தெரிகிறது. பெரும்பாலும் இந்த ஆணைக்குழு முடக்க நிலைக்கு கொண்டுசெல்லப்படலாமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேபோல் பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அதிகளவில் திருத்தப்படவுள்ளன.

புதிய அரசியலமைப்பு திருத்தத்துடன் ஜனாதிபதி அமைச்சு பதவி வகிக்கும் வாய்ப்பு உருவாகும். அதேபோல இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட சட்டத்தில் இருந்த தடையும் நீங்குமென்பது குறிப்பிடத்தக்கது.

# சந்நிதி முருகனை அடியவர்கள் தரிசிக்க அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

வரலாற்றுச் சிறப்புமிக்க சந்நிதி முருகன் ஆலயத்தின் உற்சவகால வழிபாடுகளில் அடியவர்கள் கலந்துகொள்வதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 2 ஆம் திகதி வரை தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், கொவிட் - 19 காரணமாக மக்கள் ஒன்றுகூடுகின்ற நிகழ்வுகள் சுகாதாரத்துறையினரால் மட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் குறித்த கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், சந்நிதி ஆலய உற்சவ கால செயற்பாடுகளுக்கும் பொதுச் சுகாதாரத்துறையினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன், சுமார் 350 அடியவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் அடியவர்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்கள் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதமரின் ஆலோசனையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடினார்.

இதன்மூலம் சமூக இடைவெளிகளையும்



சுகாதார நடைமுறைகளையும் பேணி செல்வச் சந்நிதி ஆலயத்தின் உற்சவகால வழிபாடுகளில் அடியவர்கள் கலந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பஸ் நிலைய மலசலகூடம் முழுமையாக மூடல்

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட புதிய பஸ் தரிப்பிட வளாகத்தில் காணப்படும் மன்னார் நகர சபையின் கண்காணிப்பிலுள்ள பொது மலசலகூடம் நேற்று முன்தினம் காலைமுதல் முழுமையாக மூடப்பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் பஸ் தரிப்பிடத்திற்கு வந்த மக்கள் மற்றும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அன்று காலை மடு திருத்தலத்திற்குச் சென்று மீண்டும் மன்னாருக்கு வந்த மக்கள் மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்திலுள்ள மலசலகூட தொகுதி முழுமையாக மூடப்பட்டுள்ளமையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அறியமுடிகின்றது. தற்போது குறித்த மலசலகூட தொகுதி முழுமையாக மூடப்பட்ட நிலையில் உள்ளமையால் மலசலகூடத்துக்குச் செல்லவுள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும்



தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் உடனடியாக மன்னார் நகர சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இரு கடைகள் உடைத்து ஒரு இலட்சம் ரூபா பணம் திருட்டு









(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளம் சந்தியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்குள் நேற்று முன்தினம் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பணத்தையும் பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வியாபார நிலையங்களை மூடிவிட்டுச்சென்ற அதன் உரிமையாளர்கள் நேற்றுக் காலை மீண்டும் அதனை திறக்க முற்பட்டபோது கதவை உடைத்து பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற குற்றத்தடுப்புப் பொலிஸார் சி.சி.ரி.வி. வீடியோ உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


குறித்த சம்பவத்தில் தொடர்பாடல் நிலையமொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பணமும், தொலைபேசி அட்டைகளும் திருடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார். அத்துடன், அதற்கு அருகாமையிலிருந்து வர்ணப்பூச்சு விற்பனை நிலையமொன்றை உடைத்த திருடர்கள் அங்கிருந்து பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இதேவேளை, அதேபகுதியில் அமைந்திருந்த மற்றொரு வியாபார நிலையத்தின் (சலூன்) கதவும் உடைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்ட நிலையில், பொருட்கள் எவையும் திருடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# சிறப்பாக இடம்பெற்ற மன்னார் மடு அன்னையின் ஆவணித் திருவிழா









(மன்னார் நகர்)

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

அன்று காலை 6.15 மணியளவில் கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்னாண்டோ தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இந்நிலையில், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடுத்திருத்தலத்திற்கு வருகை தந்தனர். திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இத்திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மடு அன்னையின் ஆசி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் காலங்களில் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம்

## அறிக்கையில் மயூரன் தெரிவிப்பு

(வவுனியா)

இனவாத அரசு ஆட்சியமைத்ததன் மூலம் அடக்குமுறை சூழலை உருவாக்கக்கூடிய அபாய நிலைமையை தமிழ்மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் - என்று முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளருமான செ.மயூரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவரால் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய மக்களின் உரிமைகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் வேட்பாளராக போட்டியிட்டிருந்தேன். வன்னியின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று மக்களை சந்தித்து எமது நிலைப்பாடுகளையும், தமிழ்த் தேசியத்தின் உறுதிப்பாடு தொடர்பாகவும் எடுத்துக்கூறியிருந்தோம்.

அந்தவகையில் வன்னியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 69,914 வாக்குகளை வழங்கி மூன்று ஆசனங்களையும், அதில் போட்டியிட்ட எனக்கு 9,518 விருப்பு வாக்குகளையும் வன்னி தமிழ் மக்கள் வழங்கியுள்ளனர்.

அதிகமான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும், சிரேஷ்ட அனுபவம்மிக்க அரசியல்வாதிகளும் இத்தேர்தலில் போட்டியிட்டிருந்த நிலையில், முதல்முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கிய என்மீது நம்பிக்கைவைத்து வாக்களித்த அனைத்து உறவுகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இனவாத அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காக போராடுபவர்களையும் தோற்கடிப்பதற்காக நூற்றுக்கணக்கான வேட்பாளர்களை வன்னியில் களமிறக்கி மக்களை திசை திருப்பியிருந்தனர். அத்துடன், தேசியக் கட்சிகளும், அவற்றின் கூட்டுக்கட்சிகளும் மக்களின் வறுமைநிலையை பயன்படுத்தி பலகோடி ரூபாவை அள்ளி இறைத்து, கணிசமான வாக்குகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இதன்மூலம் தமிழ்த் தேசியத்தையும், கூட்டமைப்பையும் அழிக்கவேண்டும் என்ற அவர்களது திட்டம் இத்தேர்தலில் ஓரளவு வெற்றியடைந்துள்ளதாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இதேவேளை, இனவாதம் என்ற ஒற்றை வார்த்தையை மாத்திரம் கூறி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ள இந்த அரசு, பௌத்த மேலாதிக்கத்தை நிறுவி எமது மக்களின் உரிமைகளை மறுத்து அடக்குமுறை சூழலை உருவாக்கக்கூடிய அபாய நிலைமையை தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ளனர்.

எமது இருப்புக்காக சிங்களப் பேரினவாத மனோநிலையில் செயற்படுபவர்களுடன் தொடர்ந்தும் போராடவேண்டிய காலச்சூழ்நிலையை இத்தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன. எனவே, அவற்றுக்கெதிராக மீண்டும் போராடவேண்டிய நிலையில் தமிழ்த் தேசிய அரசியல் தள்ளப்பட்டுள்ளது.

தேர்தலில் தோல்வியடைந்தாலும் மக்களுடன் நிற்பவர்கள் நாங்கள். மக்களின் உரிமைகளுக்காக, அவர்களின் இருப்புக்காக தொடர்ந்து குரல்கொடுப்பவர்கள் நாங்கள். எனவே, தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம் - என்றுள்ளது.

# வன்னி மக்களுக்கான எனது சேவை தொடரும்!

## ரசிக்கா பிரியதர்சினி தெரிவிப்பு

வன்னியில் யுத்தத்தால் பாதிப்படைந்த நிலையில் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளபோதும் அவர்கள் தமக்கான ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்யமுடியாமல் போயுள்ளது - என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிட்ட ரசிக்கா பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் குறித்த ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பெண் பிரதிநிதி ஒருவரை நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யாமை துரதிர்ஷ்டவசமானது. யுத்தத்தால் பாதிப்படைந்த நிலையில் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளபோதும் அவர்கள் தமக்கான ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்ய முடியாமல்போயுள்ளது. இருப்பினும், என்னையும் தமது குரலாய் நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் என்ற சிந்தனையில் பல பெண்கள் மட்டுமன்றி, வன்னி மக்கள், நான் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்திக்கும் எனது விருப்பு இலக்கத்துக்கும் வாக்களித்துள்ளார்கள். நான் நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்படாவிட்டாலும் எனக்காக வாக்களித்த மக்களுக்கு எனது நன்றிகள்.

பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கான எனது சேவைகள் தொடரும். அம்மக்களுக்காக தொடர்ந்தும் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பேன். ஆகவே, மக்கள் தமது பிரச்சனைகளை தீர்க்க தொடர்ந்தும் எம்முடன் கரம் கோருங்கள். உங்களுக்காக ஒரு பெண்ணின் குரலாய் எனது குரல் தொடர்ந்தும் ஒலிக்கும் - என்றார்.

# சாவகச்சேரியில் புகையிரதம் மோதி ஒருவர் படுகாயம்

கொழும்பிலிருந்து யாழ். நோக்கிவந்த புகையிரதத்தில் நபரொருவர் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்த விபத்து, சாவகச்சேரி, சங்கத்தானையில் இடம்பெற்றது. சங்கத்தானை பகுதியில் தொலைபேசியில் உரையாடியபடி, தண்டவாளத்தில் நடந்து சென்றவரே விபத்தில் சிக்கினார். அவர் சுதாகரித்து தண்டவாளத்திலிருந்து வெளியேற முயன்றபோதும், உடலின் ஒரு பகுதி விபத்தில் சிக்கியது. இதனால் அவரது காலொன்று துண்டிக்கப்பட்டது.

தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள நபரொருவரே விபத்தில் சிக்கினார். உடனடியாக அவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# தனிமைப்படுத்தப்பட்ட 154 பேர் விடுவிப்பு

(வவுனியா)

டுபாயிலிருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 154 பேர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் கடந்த முதலாம் திகதி டுபாயிலிருந்து அழைத்துவரப்பட்ட பயணிகள் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துவரப்பட்டு



தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில், 154 பேர் அவர்களது சொந்த இடங்களான கம்பஹா, கொழும்பு, கண்டி, கேகாலை, திருகோணமலை, களுத்துறை போன்ற பகுதிகளுக்கு பஸ்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

குறித்த பயணிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கொரோனா தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 ஓகஸ்ட் 17ஆம் திகதி, திங்கட்கிழமை

# புறக்கணிக்கப்படும் தமிழர்கள்!

புதிய அமைச்சரவை பதவியேற்ற கையோடு அமைச்சுகளின் செயலாளர் நியமனங்கள் கடந்த வாரம் இடம்பெற்றன. அவர்களுக்கான நியமனக்கடிதங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிவைத்தார். இந்த நிகழ்வை பார்க்கும்போது, இந்த அரசு தமிழ் பேசும் சமூகங்களை முற்றாக ஒதுக்கிவிட்டு செயற்படுகிறதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

அவ்வாறு நியமிக்கப்பட்ட செயலாளர்களில் ஒருவர் கூட தமிழ் பேசும் சமூகங்களைச் சார்ந்தவர்கள் இல்லையென்பது கவனிக்கப்படவேண்டியதொன்று.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ் பேசும் சமூகங்களின் ஆதரவு கிடைத்திருக்கவில்லை என்ற குறைபாடு இருந்தது. அதன்பின்னர் நடந்த அரச நியமனங்கள் பலவற்றில் தமிழர்கள் கண்டுகொள்ளப்படவில்லை. உதாரணமாக, கிழக்கு மாகாண தொல்பொருள் ஆலோசனைக்குழுவில் தமிழரோ, முஸ்லிமோ சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அறிந்த - தெரிந்த புத்திஜீவிகளும், கல்விமான்களும் தாராளமாக இருக்கும்போது அவை குறித்து அரசு அலட்டிக்கொள்ளவில்லை.

தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகள் பொதுத் தேர்தலுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியிருந்தபோது இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தனர். அந்தச் செயலணி குறித்த வர்த்தமானி வெளிவந்திருந்தாலும் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியொருவரை நியமித்து புதிய வர்த்தமானி வெளியிடப்படுமென அப்போது உறுதியளிக்கப்பட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை. அந்தச் சூழ்நிலையின் பின்னர் கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கான தமிழ் பேசும் மக்களின் ஆதரவு அதிகரித்திருந்ததாகவே தேர்தல் முடிவுகளை வைத்து கணிக்கப்படுகிறது. ஜனாதிபதி கோட்டாபய ஏதாவது நல்ல விடயங்களை செய்வார் என்று எதிர்பார்த்தே தமிழ் பேசும் மக்களின் ஆதரவு அவர் சார்பான கட்சிக்கு அதிகரித்திருக்கக்கூடும். ஆனால், கோட்டா தலைமையில் அமைந்துள்ள புதிய அரசு அவற்றை கணக்கிற்கொள்ளவில்லை.

அமைச்சரவையில் ஒரேயொரு தமிழ் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவும் (கடற்றொழில்), முஸ்லிம் அமைச்சராக (நீதியமைச்சர் )தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்ட அலி சப்ரியும் பணியாற்றுகின்றனர். கடந்த அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சரொருவர் கூட இருக்கவில்லையென்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம். ஆகமொத்தத்தில் அமைச்சரவை கூட சிறுபான்மை இன மக்களின் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தையே கொண்டிருக்கிறது. இது நல்லதொரு எதிர்காலத்துக்கான கட்டியமல்ல.

சிங்களப் பெரும்பான்மை வாக்குகளில் ஜனாதிபதி கோட்டா தெரிவுசெய்யப்பட்டார் என்ற ஒரே காரணத்திற்காக ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களை ஓரங்கட்டுவது சரிதானா? தமிழர்களோ முஸ்லிம்களோ ஏன் வாக்களிக்கவில்லை என்ற காரணங்களை கண்டறிய முற்படாமல் அவர்களை பழிவாங்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பது நேர்மையான ஆட்சிக்கு உகந்ததா? ஆட்சியாளர்கள் பதில் சொல்லவேண்டும்.

அமைச்சரவையில் குறைந்தளவான இடம், அரச அதிகாரிகள் மட்டத்தில் உரிய இடம் வழங்கப்படாமை போன்ற விடயங்களால் தமிழ் பேசும் சமூக மக்கள் மத்தியில் இனம்புரியாத சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் பிரச்சினைகளை எவர் கவனத்திற்கொள்வார்? அரச சேவையில் தமிழ் பேசும் சமூக மக்களின் பங்களிப்பென்ன? அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்கப்படுவதால் நீதி நியாயம் கிடைக்குமா? என்றெல்லாம் அவர்களது மனதில் எழும்புவது இயற்கையே.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இந்தப் பிரச்சினையை கவனத்திற்கொள்ளவேண்டும். தமிழர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்படவில்லை அல்லது ஆணைக்குழுவில் தமிழர் ஒருவர் நியமிக்கப்படாமை ஏன்? என தமிழ் பேசும் சமூக மக்கள் கேள்வியெழுப்புவது இன ரீதியான கோணத்தில் அல்ல. இன அக்கறை ஒருபக்கம் இருந்தாலும் தாங்கள் ஏன் ஒதுக்கப்படுகிறார்கள் என்ற கேள்விக்கு விடை அவர்களுக்கு தெரிந்தாகவேண்டும்.

பன்முகத்தன்மை, அனைத்து இன மக்களுக்கும் ஒரே அகப்பையில் பகிர்தல், எல்லோரும் சமவுரிமை கொண்டவர்கள் என்ற கோஷங்களை தேர்தல் காலத்தில் வாய்கிழியக்கத்திய இப்போதைய ஆட்சியாளர்கள் அதனை செயலில் காட்டவேண்டும். உள்நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகளிலும் அரசின் மீதான பார்வை செலுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. தமிழ் பேசும் மக்களை புறக்கணிப்பதை அரசு உடனடியாக நிறுத்தி அவர்களும் இந்நாட்டின் சமவுரிமை கொண்ட மக்கள் என்பதை செயலில் காட்டவேண்டும். இல்லையேல் காலம் ஒருநாள் பதில் சொல்லும். தமிழர்களை கண்டுகொள்ளாமல் ஓரங்கட்டிய கடந்த கால அரசுகளை போன்றே வரலாறு உங்களை தூற்றலாம்.

நாடாளுமன்றத்தில் கொண்டுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கூட ஜனநாயகத்துக்கானது என்பதை ஆட்சியாளர்கள் செயலில் காட்டவேண்டும். ஆட்சியாளர்கள் ஒதுக்கவேண்டியது தமிழ் பேசும் சமூக மக்களையல்ல. தமது மனங்களில் உள்ள கறைகளையே....!

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



# திருவிழா காணும் நல்லூர் கந்தன்

- சிவக்குமார் திவியா -

நல்லூர்க் கந்தன் யாழ். இந்துக்களின் மனதில் என்றும் நிறைந்தவன். பண்டைக்கால அரசுகள் முதல் இன்றைய அரசுகள் வரை ஆட்சிகள் மாறியபோதும் மக்கள் மனதைப் புனிதப்படுத்தி என்றென்றும் அவர்கள் உள்ளத்தில் அரசனாக வீற்றிருப்பது நல்லூர்க் கந்தன்தான்.

ஈழத்தின் புகழ்பூத்த - வரலாற்றுச் சிறப்புமிக்க அலங்காரக் கந்தனின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் கடந்த 24ஆம் திகதி பக்திபூர்வமாக ஆரம்பமாகி கருவறையில் வீற்றிருக்கும் அலங்காரவேலுக்கும், வசந்தமண்டவத்தில் அருள்பாலிக்கும் விநாயகர், நல்லூர்க் கந்தனுக்கும் வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள் என்பன இடம்பெற்று பின்னர் வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளி கொடியேற்ற பீடத்திற்கு வந்தடைந்தனர்.

சுப மூர்த்த 10 மணியளவில் மேளதாள, வாத்தியங்கள் முழங்க, அந்தணர் சிவாச்சாரியர்களின் வேதபாராயணம் ஓத ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அ.வைகுந்தன் தலைமையில் அலங்காரக் கந்தனின் மஹோற்சவ கொடியேற்றம் ஏற்றிவைக்கப்பட்டது.

25 நாட்கள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மஹோற்சவம் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி மாலை திருமஞ்சத் திருவிழாவும், 12ஆம் திகதி காலை சூர்யோற்சவ திருவிழாவும் மாலை கார்த்திகை உற்சவமும், 13ஆம் திகதி சந்தானகோபாலர் உற்சவமும், மாலை கைலாசவாகனமும், 14ஆம் திகதி மாலை வேல்விமானமும், 15ஆம் திகதி தண்டாயுத பாணி உற்சவம், மாலை ஒருமுகத்திருவிழாவும், 22ஆம் நாள் திருவிழாவான மாம்பழத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை 14ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து பிள்ளையாரும் முருகப்பெருமானும் வெளிவீதியுலா வந்தனர்.

இந்த மாம்பழத் திருவிழா புராணக் கதையை மையமாகக்கொண்டே ஒவ்வொரு வருடமும் இந்தத் திருவிழா இடம்பெற்றுவருகிறது. அதற்கமைய ஒருசமயம் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நாரதர் மாம்பழமொன்றை வழங்கினார். அதனை யாருக்கு கொடுப்பது எனத் தீர்மானிக்க, முதலில் உலகை சுற்றிவருபவருக்கே இந்த மாம்பழத்தை தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையாருக்கும் முருகனுக்கும் கூறினர். உடனே முருகபெருமான் மயில் மீதேறி உலகை சுற்றிவரச் சென்றபோது, பிள்ளையார் சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றிவந்து நீங்களே என் உலகம் எனக் கூறி மாம்பழத்தை பெற்றுக்கொண்டார்.

உலகை சுற்றிவந்த முருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் தனது நகை, உடை அனைத்தையும் துறந்த முருகன், ஆண்டி கோலத்தில் பழனி மலையில் போய் அமர்ந்தார்.

இந்தப் புராணக்கதையை மையமாகவைத்தே இந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

16ஆம் திகதி சப்பரமும், 17ஆம் திகதி (இன்று திங்கட்கிழமை) மிகவும் விமரிசையாக தேரோட்டமும் நடைபெறுகிறது. தேர்த்திருவிழாவன்று சுவாமியைத் தேரில் வைத்து வடம் பிடித்து இழுத்து வருவார்கள். தேர் இருப்பிடம் அடைந்ததும் சுவாமிக்கு பச்சை சாத்தி அலங்கரித்து கோயில் இருப்பிடம் கொண்டுசெல்வர்.

தேர்த் திருவிழாவில் காவடி, தீ மிதித்தல், கற்பூரச் சட்டி, பறவைக் காவடி, தூக்குக் காவடி, அங்கப் பிரதிஷ்டை, அடி அழித்தல் என அடியார்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவர்.

யாழ். மண்ணின் சித்தர்களில் ஒருவரான யோகர் சுவாமி, நல்லூர்க் கந்தனின் தேரடியில் அமர்ந்திருந்து வெகுநேரம் தியானத்தில் இருப்பார் எனச் சொல்வார்கள்.

கோவிலின் பிரதான கோபுரம் கிழக்குப் பார்த்தவண்ணம் இருக்கிறது. இப்பொழுது தெற்குப் புறத்திலும் ஒரு புதிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வாலய வருடாந்த உற்சவத்தில் தேர், தீர்த்தத் திருவிழா மிகவும் சிறப்புடன் நிறைவுபெறும். கந்தன் தேரில் வீதி உலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். நாளை 18ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெறவிருக்கின்றது. காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கத்துடன் இனிதே ஆலயத்தின் மஹோற்சவம் நிறைவடையும்.

நல்லைக் கந்தன் மஹோற்சவம் இலங்கைத் திருநாட்டில் மாத்திரமல்ல, உலகளாவிய ரீதியில் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் ஆன்மீக அலையை ஏற்படுத்தும் உற்சவமாகத் திகழ்கிறது.

“பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலின்றிப் பிற வார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள்...” என்கிற வாக்குக்கமைய நாமனைவரும் ஆலயத்திற்குள் அமைதி பேணவேண்டும். ஆனால், இம்முறை கொரோனா தொற்று பரவல் காணப்படும் நிலையில், உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நல்லூர் ஆலயத்திற்கு



வரும் அடியவர்கள் அடையாள அட்டை கொண்டுவருவது அவசியமாக்கப்பட்டுள்ளது. சுகாதார விதிமுறைகளை பேணுவதுடன், ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடியில் அடையாள அட்டையை காண்பித்தே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

வெளிநாட்டிலிருந்து வருபவராக இருந்தால் அவர் தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர் என்ற சான்றிதழை காண்பித்த பின்னரே ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவர். ஆலயத்திற்குள் ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## ஆலய வரலாறு

ஆலயவரலாறு பற்றி பார்போமானால் கோட்டை இராச்சியத்தை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாகிய செண்பகப்பெருமான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்த காலப்பகுதியில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டது.

முற்காலத்தில் இலங்கையின் வடபகுதியைத் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தபோது யாழ்ப்பாண இராச்சியத்துக்கு நல்லூர் என்னும் நகரமே இராசதானியாக அமைந்திருந்தது.

அக்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் பக்திக்கும்,வழிபாட்டிற்கும் உரிய ஆலயமாக இவ்வாலயம் திகழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இது இருந்தது என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமாக பின்வரும் தனிப்பாடல், 16 அல்லது 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

**“இலகிய சகாத்தமெண்ணூற்**
**றெழுபதாமாண்டதெல்லை**
**யலர்பொலி மாலை மார்பனாம் புனனேகவாகு**
**நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து**
**நல்லைக்**
**குலவிய கந்தவேட்குக் கோயிலும்**
**புரிவித்தானே”**

ஆனால், இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டே சிங்கள அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் சிறீசங்கபோதி புவனேகவாகு எனப்பெயர் கொண்டு கோட்டே அரசனான சண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள். சமஸ்கிருதத்திலுள்ள இக்கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது:

“சிறீமான் மஹாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி ஸ்ரீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சூர்யகுல வம்ஸோத்பவ சிறீ சங்கபோதி புவனேகபாகு ஸமுஹா”

திருவருள் பொருந்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற சுப்பிரமணியரின் திருவடிகளை வணங்குபவனும், மன்னர்களுக்கு மன்னனும், மிகுந்த செல்வங்களுடையவனும், இப் பரந்த பூமண்டலத்தில் எல்லாத்திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனும், சூரியகுலத்தில் உதித்தவனுமாகிய சிறீ சங்கபோதி புவனேகவாகு என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோயிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகவாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக்கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறுசிலர் கருத்து.

யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோவில் இதுவேயென்பது போர்த்துக்கீசருடைய குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசத் தளபதியான பிலிப்பே டி ஒலிவேரா, 1620இல் அரசின் தலைநகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டான். இதிலிருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதில் பயன்பட்டதாகத் தெரிகின்றது. இது இருந்த இடத்தில் போர்த்துக்கீசர் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை அமைத்ததாகத் தெரிகிறது. பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். இன்றும் இவ்விடத்தில் பிற்காலத்தில் பெரிதாகத் திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயமே காணப்பட்டதாகவும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658 – 1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள். சிங்கைப் பரராசசேகரன் ஆட்சிக்காலத்தில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை நடுநாயகமாகக்கொண்டு நான்கு எல்லைகளிலும் நான்கு ஆலயங்கள் கட்டப்பட்டன.

வடக்கே சட்டநாதர் கோயிலும், கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலும், தெற்கே கைலாசநாதர் கோயிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும் அமைந்து காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் மடாலயம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாஸ்திர விதிக்கமையவும் மாற்றியமைத்து இன்றைய நிலைக்குக் கொண்டுவரவித்திட்டவர் நல்லை நகர் நாவலர்.

ஈழத் திருநாட்டிலே கோயில் கொண்டுள்ள கதிர்காமக் கந்தனை கற்பூரக் கந்தனென்றும், சந்நிதி முருகனை அன்னதானக் கந்தனென்றும், மாவைக் கந்தனை அபிஷேகக் கந்தனென்றும் அழைப்பதுபோல நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தனென்று அழைக்கும் மரபு நீண்டகாலமாக நிலவிவருகிறது.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே முருகப்பெருமானின் திருவுருவம் வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக முருகப்பெருமானுடைய ஞானசக்தியாகிய வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன. இலங்கையிலேயே ஒரே ஒரு சைவ ஆதீனமாக விளங்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆலயத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ளது.

ஈழத்தின் தலைசிறந்த சித்தர்களான செல்லப்பா சுவாமிகளும் அவரது சீடரான யோகர் சுவாமிகளும் தடம்பதித்த புண்ணிய திருக்கோயிலாக நல்லூர்க் கந்தன் ஆலயமும், திருவீதியும் திகழ்கின்றன.

ஒரு ரூபாவுக்கு அர்ச்சனை இடம்பெறும் ஆலயம் நல்லூர்க் கந்தன் ஆலயமாகும். இது ஈழத்துக் கோயில்களில் வேறெங்கும் காணமுடியாத சிறப்பெனலாம்.

ஆலயத்தின் கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகளில் வானளாவிய ரீதியில் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் ஆலய வளர்ச்சிக்கான அடையாளங்களாகவுள்ளன. ஆலயத்தின் வடக்குப் பக்கமாக இலங்கையிலேயே மிகவும் உயரமான குபேர வாசல் நவதள இராஜ கோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, கடந்த 2015ஆம் ஆண்டு ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் 18 ஆம் நாளாகிய கார்த்திகைத் திருவிழாவன்று கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மஹோற்சவ நாட்களில் 55 திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் கொடியேற்றம், திருமஞ்சத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, கைலாச வாகனம், சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என்பன முக்கியமானவை.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!

*இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேந்திர சிங் தோனி, ஒருநாள் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்... அணியை ஒரு நல்ல இடத்திற்கு கொண்டுவந்துவிட்டு வெளியேறுகிறார்... உலகமெங்கும் வாழ்த்துகள் குவிகின்றன...*

*இந்தச் செய்தியை நண்பரொருவர் கூறி ஒரு விடயத்தையும் சேர்த்தே சொன்னார்...*

*அண்ணே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் அரசியலுக்கு வந்தநாள் முதல் இந்திய கிரிக்கெட் அணியின் கெப்டன்களாக ஸ்ரீநிவாஸ் வெங்கட்ராகவன், சுனில் கவாஸ்கர், பிஷான் சிங் பேடி, குண்டப்பா விஸ்வநாத், கபில் தேவ், திலீப் வெங்சர்க்கர், ரவி சாஸ்திரி, கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், மொஹம்மட் அசாருதீன், சச்சின் டெண்டுல்கர், சவ்ரவ் கங்குலி, ராகுல் திராவிட், விரேந்தர் ஷேவாக், அனில் கும்ப்ளே, எம்.எஸ் தோனி ஆகியோர் இருந்திருக்கிறார்கள்... எல்லோரும் தங்களது டீம் ஒரு நிலைக்கு வந்தபின்னர் ரிட்டயர் கொடுத்துட்டாங்க... ஆனால்....? என்று இழுத்தார்...*

*இதற்கு மேல் நான் இதனை விலாவாரியாகவும் உங்களுக்கு சொல்ல வேண்டுமா?*



- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# அபிவிருத்தியில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு

## அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை திட்டமிடல் சேவை சங்கத்தினருக்கு பசில் ஆலோசனை





நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்டுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான மகத்தான ஆணையை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவை சங்கத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று கடந்த சனிக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஆணையை பெற்றுக்கொடுத்து அதனூடாக நாட்டின் அபிவிருத்தியில் தெளிவான மாற்றத்தை மக்கள் எதிர்பார்ப்பதாகவும், அந்த மாற்றத்தைக் கொண்டுவருவதில் திட்டமிடல் சேவைக்கு பெரும் பங்கிருப்பதாகவும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது தமது நிலைப்பாட்டை தெரிவித்த இலங்கை திட்டமிடல் சேவைகள் சங்கத்தினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ய தயாராக இருப்பதாகவும் அதற்கான நிறுவன கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான அவசியம் தொடர்பிலும் பசில் ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்தினர்.

இந்தக் கலந்துரையாடலின்போது பசில் ராஜபக்ஷ தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சகல அரச சேவைகளையும் மையமாகக்கொண்டு, இந்தக் கட்டமைப்பு, நிர்வாக மாற்றங்கள் தொடர்பான செயற்பாடுகள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவந்து அதுதொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தேவைகளுக்கேற்ப மனித வளத்தை நிர்வகிக்கவேண்டும், விசேடமாக தொழிலாளர் களை மையப்படுத்தி இந்நாட்டின் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான திட்டங்களை வகுக்கவேண்டும், அபிவிருத்திகளை உட்கட்டமைப்பு மேம்பாட்டுடன் மட்டுப்படுத்தி விடக்கூடாது, மக்களின் பங்களிப்புடன் ஒரு விரிவான அபிவிருத்தி செயற்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டும் - என்றார்.

பல்வேறு அரச நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வுசெய்து தேவையான திட்டங்களை வகுக்கவும், அதற்கு அவசியமான தரவுகளை சேகரித்து நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைகளுக்காக பயன்படுத்தக்கூடிய தரவு சேமிப்பு மையத்தை அமைக்கவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இலங்கை திட்டமிடல் சேவை சங்கத்தினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# அடிப்படை பிரச்சினையற்ற நாட்டை உருவாக்குவேன்

## தனது கடமை அதுவென்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ



நாடுபூராகவும் முன்னெடுத்த பயணங்களின் போது, மக்களை நேரடியாக சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்ததாகவும் அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டியது தனது கடமை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளர்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் சமீபகாலமாக ஒரு மாதம் நாட்டைச் சுற்றி பயணித்தபோது, பலவகையான சமூகங்களைச் சந்தித்தேன். அவர்களில் பலருக்கு தேவைப்பட்டது நிரந்தர காணி, விவசாயத்துக்குப் பொருத்தமான நிலம், நிரந்தர வீடு கட்ட வசதிகள், குழந்தைகளின் கல்விக்கான தேசிய பாடசாலைகள் மற்றும் குடிநீர் தேவை என்பனவாகும். இந்தத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும், இந்தக் கேள்விகளை மீண்டும் கேட்காத ஒரு நாட்டை உருவாக்குவதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்.

# அரச நிறுவனங்கள் அரச கட்டிடங்களுக்கு இடமாற்றம்

## -ஜனாதிபதி உத்தரவு

தனியார் கட்டிடங்களில் செயற்படும் அரச நிறுவனங்களை அவ்விடங்களிலிருந்து மாற்றி, அரச கட்டிடங்களில் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்புக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய, அமைச்சர்களும், அதிகாரிகளும் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் தனியார் கட்டிடங்களில் செயற்படும் நிறுவனங்களை அரச கட்டிடங்களுக்கு இடமாற்றுவது அவசியமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# புதிய அரசியலமைப்பு திருத்தம் செப்டெம்பரில்



நாட்டிற்கேற்ற புதிய அரசியலமைப்புத் திருத்தம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

உத்தேச அரசியலமைப்பை செப்டெம்பர் மாதமளவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பசில் ராஜபக்ஷவும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில், அரசாங்கத் தரப்பில் அநேகமானவர்கள் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொருத்தமற்ற விடயங்களை திருத்தியமைத்து 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ புதிய பீடாதிபதியாக கலாநிதி நிமலதாசன் நியமனம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் புதிய பீடாதிபதியாக கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் புதிய பீடாதிபதி பதவிக்காக கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசன் மற்றும் ரவிராணி யோகேந்திரராஜா ஆகியோருக்கு இடையில் வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் 25 வாக்குகளை கலாநிதி நிமலதாசன் பெற்றிருந்த நிலையில், ரவிராணி யோகேந்திரராஜா 16 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

இதனையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடச் சபை பாலசுந்தரம் நிமலதாசனை வணிக முகாமைத்துவ பீடத்தின் புதிய பீடாதிபதியாக தெரிவு செய்தது.

கணக்கியல்துறை பேராசிரியரான அவர், 42ஆவது வயதில் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி அலகின் பணிப்பாளரும் கணக்கியல்துறையின் பேராசிரியருமாக கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசன் மிகக் குறைந்த வயதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் பேராசிரியராகத் தெரிவாகியவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிக பட்டதாரியான அவர், ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் பட்டதாரியாகவும் பங்களாதேஷ் சிட்டாக்கோங் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தையும் நிறைவுசெய்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2005ஆம் ஆண்டு விரிவுரையாளராக தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்த பாலசுந்தரம் நிமலதாசன், 2010ஆம் ஆண்டில் முதுநிலை விரிவுரையாளராகவும் 2015ஆம் ஆண்டில் பேராசிரியராகவும் உயர் வடைந்தார்.

# நுவரெலியாவில் சீரற்ற காலநிலையால் விவசாயிகள் பாதிப்பு



நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த கன மழையால் காய்கறி பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் பல விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக காய்கறி பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் வருமான இழப்பை சந்திக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று காரணமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த காய்கறிச்செய்கை தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சந்தையின் தேவைக்கு குறைவான அளவில் காய்கறிகளை வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையால் காய்கறிகளின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அதுமட்டுமன்றி உற்பத்திச் செலவுகளை சரிசெய்ய வழியில்லாமல் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும், விவசாயிகளின் இழப்பீட்டை மதிப்பீடுசெய்து அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்தன.

# 5 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது!



ஹெரோயின் போதைப்பொருளுடன் மினுவங்கொடை பிரதேசத்தில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவர் 7 நாள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், இந்த சந்தேகநபரிடமிருந்து வங்கி காசோலைகள் உள்ளிட்ட இன்னும் பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவங்கொட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, அந்தப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீன்தெனிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே 5 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, குறித்த சந்தேகநபரிடமிருந்து 98 இலட்சம் பெறுமதியுடைய பல்வேறு வங்கிகளுடைய 48 காசோலைகள், 24 காசோலை புத்தகங்கள், 4 கையடக்கத் தொலைபேசிகள், கார் மற்றும் 2 வாள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 41 வயதுடையவர் என்பதோடு மினுவங்கொட பிரதேசத்தை சேர்ந்தவராவார். நேற்று முன்தினம் இவர் மினுவங்கொட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதன் பின்னர் அவர் 7 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# பொகவந்தலாவையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவர் கைது!



(பொகவந்தலாவ)

பொகவந்தலாவையில் இருவேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவரை பொகவந்தலாவை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதன்படி பொகவந்தலாவை, கொட்டயாகல தோட்டத்திலுள்ள தேயிலைமலையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் நேற்று முன்தினம் மாலையும், லொய்னோன் தோட்டத்தில் இவ்வாறான செயலில் ஈடுபட்ட மூவர் நேற்று அதிகாலையும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

# ஓபாத மூன்றாம் பிரிவு தோட்ட மக்களின் வாய்க்கால் பிரச்சினை: 6 மாத காலமாக கண்டுகொள்ளாமலிருந்த தோட்ட நிர்வாகம்





(பலாங்கொடை)

6 மாத காலமாக தீர்க்கப்படாமலிருந்த ஓபாத தோட்டத்தின் வாய்க்கால் பிரச்சினையை ஐக்கிய தொழிலாளர் ஒன்றியம் சீரமைத்துக் கொடுத்தது.

கஹவத்த பிரதேச செயலகத்திற்குட்பட் ஓபாத தோட்டத்தில் அத்தோட்ட வீடுகளுக்குச் செல்லும் பாதையில் சீரமைக்கப்படாத வாய்க்காலொன்றின் வழியாக மழை காலத்திற்கு மழை நீர் தோட்டக் குடியிருப்புகளுக்கு வருவதால் அந்த வாய்க்காலை சீரமைத்துத் தருமாறு ஓபாத மூன்றாம் பிரிவு தோட்ட மக்கள் தோட்ட நிர்வாகத்திடம் 6 மாதத்திற்கு முன் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அந்த வாய்க்கால் இதுவரைகாலமும் சீரமைக்கப்படாததால் கடந்த 14ஆம் திகதி அத்தோட்ட மக்கள் வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். வேலைநிறுத்தப் போராட்டம் நடந்ததை தெரிந்துகொண்ட இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் திருச்செல்வம், நேரடியாக தமது குழுவினருடன் சென்று அத்தோட்ட மக்களோடு கலந்துரையாடிய பின்னர் தோட்ட நிர்வாகத்திடமும் கலந்துரையாடி அத்தோட்ட மக்களின் வாய்க்கால் பிரச்சினையை சீரமைத்துக் கொடுத்தார்.

# வர்த்தகரிடம் கைத்தொலைபேசியூடாக கப்பம் கோரிய மர்மநபர்

(மஸ்கெலியா)

மஸ்கெலிய நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்களிடம் கைத்தொலைபேசியூடாக கப்பம் கோரும் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதுவிடயமாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை வர்த்தகர் ஒருவர் பதிவுசெய்துள்ளார்.

குறித்த வர்த்தகருக்கு 0701291096 என்ற இலக்கத்திலிருந்து அழைப்பு வர, வந்த அழைப்பை ஏற்று கதைத்தபோது, அழைப்பில் வந்தவர் தான் மஸ்கெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி பண்டார எனவும், தனது குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு விரைவு பணம் (easy cash) அனுப்புமாறும் கூறியதுடன், தான் வந்த வாகனம்பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்து மீண்டும் வந்து பணம் தருவதாகவும் கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் அவ்வாறான அதிகாரி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் இல்லை என்பதை பொலிஸ் நிலைய அதிகாரி யசரத்ன பண்டார தெரிவித்தார். அழைப்பில் வந்த குரலில் சந்தேகம்கொண்ட வர்த்தகர் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டு சகல வர்த்தகர்களையும் கவனமாக இருக்குமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலையம் ஊடாகவும் வர்த்தகச் சங்க செயலாளர் ஊடாகவும் அறிவித்துள்ளார்.

இந்த இலக்கம் கொண்ட தொலைபேசி அழைப்பு வந்தால் உடன் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் அவ்வாறு பணம் வழங்கவேண்டாம் எனவும் மஸ்கெலிய பொலிஸ் நிலைய அதிகாரி யசரத்ன பண்டார அனைத்து வர்த்தகர்களுக்கும் வேண்டுகோள் விடுத்ததுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# அரசியலமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்களை நீக்குவதை தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்ப்பதாக இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(ஹட்டன்)

அரசியலமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்களை முழுமையாக நீக்குவதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி கடும் எதிர்ப்பை வெளியிடும் - என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, " புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் 28 பேர் இடம்பிடித்துள்ளனர். இதில் மலையகத் தமிழருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. 1977ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமைச்சரவையில் மலையகத் தமிழருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுவந்தது. இம்முறை அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது.



அதேபோல் புத்தசாசனத்துக்கு தனி அமைச்சொன்று இருக்கும் நிலையில், ஏனைய மதங்களுக்கான அமைச்சுகள் நீக்கப்பட்டு சமய விவகார அமைச்சென உருவாக்கப்பட்டு அவை சார்ந்த திணைக்களங்கள் பிரதமரின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டும். அத்துடன், சில அமைச்சுகள் பொருத்தமற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ளன.

19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படுமென அரச தரப்பில் கூறப்படுகின்றது. அதனை முழுமையாக நீக்குவதற்கு இடமளிக்கமாட்டோம். வேண்டுமானால் திருத்தங்களை மேற்கொள்ளலாம். 13ஆவது திருத்தச்சட்டமானது சிறுபான்மையின மக்களுக்காக உருவானது. அதில் கைவைத்தால் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியாக சில விட்டுக்கொடுப்புகளை செய்து பயணித்ததால் மட்டுமே 100 வீத வெற்றி கிடைத்தது. வருகின்ற தேர்தல்களிலும் முற்போக்குக் கூட்டணியாகவே முடிவுகளை எடுப்போம். எதிரணியில் இருந்தாலும் எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அதற்கு எதிராகவும் நீதிக்காகவும் உரத்து குரல் எழுப்புவோம் "-என்றார்.

# அரசாங்கத்தின் சேவைகளை வெளிக்கொணர்வதற்கு வெகுசன ஊடகத்துறை அவசியம்

## -வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

(கண்டி)

அரசாங்க ஊடகம் அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் அரசாங்கத்தின் சேவைகளையும் வெளிக்கொணர்வதற்கு மிகவும் அவசியமாகும் - என்று வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். கண்டி நகரில் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி பொதுச்சந்தை மற்றும் ஜோர்ஜ் சில்வா பார்க் உள்ளிட்ட புறநகரங்களில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு வரவேற்பளிக்கப்பட்டதுடன், அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,



“இந்நாட்டில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து பணிகளையும் மக்கள் அறிந்துகொள்வதற்கு அரச ஊடகம் கட்டாயமான ஒன்றாகும். எனினும், அதற்கு மாறாக யாரும் கருத்துகளை முன்வைப்பார்களாயின், அந்தக் கருத்துகளை நாங்கள் மதிக்கின்றோம். அவை உண்மைத் தன்மையாக இருக்கவேண்டும். கடந்த அரசாங் கத்தினர் அரச ஊடகத்தின் மூலமாக நாங்கள் திருடர்கள் இல்லை என்று கூறியதை நாங்கள் அறிந்தோம்.

ஐக்கிய தேசியக் கட்சி, சஜித் பிரேமதாஸவின் கட்சியில் போட்டியிட்டவர்கள் மிகவும் சிறியவர்கள். தகைமையில்லாதவர்கள் உள்ளபடி யினாலேயே இன்று கட்சி சிதைவடைந்துள்ளது. கடந்த நான்கரை வருடம் நல்லாட்சிக் காலத்தில் பொய்க்கு சப்தம் போட்டவர்களுக்கு தற்போது என்ன நடந்தது?

நாட்டின் தேசியத்தினதும், பொருளாதாரத் தினதும் அடைவுகளை எதிர்வரும் ஒன்றரை வருடங்களில் எதிர்பார்க்கமுடியும். இந்நாட்டில் மிகவும் பிரபல்யமாக பித்தளைக் கைத்தொழில் இருந்ததுடன், அது நாசமாக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலுள்ள சகல பொருளாதார வளங்களும் சிறந்த முறையில் கட்டியெழுப்பப்படும். அதை எதிர்வரும் காலங்களில் அறிந்துகொள்ள முடியும்” - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் அனைவருக்கும் நீர் வசதி பூர்த்திசெய்யப்படும்

## -அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உறுதி

(இரத்தினபுரி)



எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் நாட்டின் அனைத்து மக்களுக்கும் தேவையான நீர் வசதி பெற்றுக் கொடுக்கப்படும் என்று நீர் வழங்கல்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமைச்சுப் பதவியை பொறுப் பேற்றதன்பின் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவை மாகாண சபை கட்டிடத் தொகுதியில் வைத்து சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நீர் மக்களின் வாழ்க்கை. இந்நாட்டில் சுகாதாரம், கல்வி, மின்சாரத்தை போன்று நீரும் அத்தியாவசியமானதாகும். எனவே மக்களுக்குத் தேவையான நீரை எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் பெற்றுக் கொடுப்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.


நீர் வழங்கல்துறை அமைச்சுக்கு சிறந்த பொறியியலாளர்களை சேவையில் அமர்த்தி, மக்களுக்கு சிறந்த முறையில் சேவையைப் பெற்றுகொடுப்பதே எனது குறிக்கோளாகும் - என்று நீர் வழங்கல்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வெற்றியை வரவேற்கும் முகமாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன், இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுளா இதிகாவெல உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.




# ஹெரோயின், கேரள கஞ்சாவுடன் நாவலப்பிட்டியில் மூவர் கைது

(பொகவந்தலாவ)



நாவலப்பிட்டியில் ஹெரோயின் மற்றும் கேரள கஞ்சாவுடன் மூவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 530 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 430 மில்லிகிராம் கேரள கஞ்சா ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளதுடன், நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேகம – கல்குவாரி பிரதேசத்தில் வைத்தே நாவலப்பிட்டி குற்றத்தடுப்பு பிரி வினரால் இவர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கைதானவர்கள் 25-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாவலப்பிட்டி- இம்புல்பிட்டியில் குரங்கின் தாக்குதலுக்குள்ளான 10 வயது சிறுமி

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி இம்புல்பிட்டி மேல்பிரிவில் குரங்கொன்று, 10 வயது சிறுமியொருவரை கடித்து தாக்கிய சம்பவமொன்று நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் 10 வயதுடைய சிறுமி மேலதிக வகுப்பிற்கு சென்று வீடுதிரும்பியபோது அயல்வீட்டில் வளர்ப்பு பிராணியாக இருந்து வந்த குரங்கு தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இது தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த நேரத்தில் சிறுமியின் வீட்டில் யாருமில்லாத நிலையில், அயல்வீட்டு குரங்கு வளர்ப்பாளர்கள் விஷேட வைபவம் காரணமாக 2 நாட்களுக்கு மற்றொரு அயல்வீட்டில் குரங்கை பார்த்துக்கொள்ளுமாறு விட்டுச் சென்றுள்ளனர்.

குரங்கிற்கு உணவு வைக்கும் தருணத்தில் வெளியில் வந்த குரங்கு சிறுமியை தாக்கி யுள்ளது. இதன்போது பலத்த காயமுற்ற சிறுமி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதோடு சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு சிறுமியின் உடல் நிலை ஏற்புடையதாக இல்லை என்ப தால், தொடர்ந்து சிகிச்சையளிக் கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த குரங்கு இதற்கு முன்பும் இதுபோன்று பலரை கடித்துள்ளமை தெரியவந்துள்ளது.

# கண்டி குண்டசாலையில் சகல வசதிகளுடன் புதிய பெண்கள் பாடசாலை

## -மத்திய மாகாண ஆளுநர் நடவடிக்கை



(கண்டி)

கண்டி பெண்கள் பாடசாலைகளில் ஏற்பட்டுவரும் இடநெரிசலைக் குறைக்க புதிதாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டியில் நடந்த ஒரு வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது-

கண்டியிலுள்ள பெண்கள் பாடசாலைகளில் ஏற்பட்டுவரும் நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் குண்டசாலை பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பெண்கள் பாடசாலையொன்றை அமைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்றார். எனவே, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பெண்கள் பாடசாலையொன்றை அமைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கல்வி அதிகாரிகளுக்கு ஏற்கனவே இது விடயமாக தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், கண்டியிலுள்ள பிரபலமான பெண்கள் பாடசாலைகளில் காணப்படும் அனைத்து வசதிகளை ஒத்த தான புதிய பாடசாலையை விரைவில் திறக்க வுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# கஹவத்த – ஓபாதயில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு 6 வருடங்களாகியும் நிரந்தர வதிவிடமின்றி வாடும் 27 குடும்பங்கள்

(பலாங்கொடை)



கஹவத்த பிரதேச செய லகத்திற்குட்பட்ட ஓபாத மூன்றாம் பிரிவு தோட்டத்தில் 2014 ஆண்டு ஜூன் மாதம் பெய்த கடும் மழையால் அத்தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பொன்றுக்கு மண்சரிவு அபாய எச் சரிக்கை விடுக்கப்பட்டது. 6 வருடங்கள் கடந்த நிலையில், உரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் எதுவும் இதுவரையில் அமைத்துத் தரவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அந்த லயன் குடியிருப்பில் 27 குடும்பங்களில் சுமார் 60 பேர் வாழ்ந்துவருகின்றனர். மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட வீடுகளில் உள்ளவர்களை தோட்ட அதிகாரிகள் தோட்ட பாடசாலையில் தற்காலிகமாக தங்கவைத்தனர். அத்தோட்ட பாடசாலையில் தற்காலிகமாக தங்கியிருந்த மக்கள் ஒரு மாதத்திற்கு பின் மறுபடியும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட வீடுகளுக்கே வரவேண்டிய நிலைமை வந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தார்கள்.



மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு 6 வருடங்கள் கடந்த நிலையில், உரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான இடத்தை அமைத்துத் தரவில்லை என்பதால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் அத்தோட்டத்தை விட்டு சென்றதாகவும் தெரியவருகின்றது.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்பில் 5 குடும்பங்களுக்கு மாத்திரம் தோட்ட அதிகாரிகள் பாது காப்பான இடங்களை அமைத்து தந்த துடன், மீதமுள்ளவர்களுக்கு இன்னும் தங்குமிட வசதிகள் எதுவும் அமைத்துத் தரவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிப்பதுடன், தங்குமிட வசதிகள் அமைத்துத் தரும் வரையில் உயிரை கையில் பிடித்துக்கொண்டு வாழ் வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பான இடத்தைத் தேடிப்போகும் அளவுக்கு வசதிகள் இல்லை என்றும் உரிய அதிகாரிகள் பாதுகாப்பான இடத்தை விரைவில் அமைத்துத் தருமாறும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

## அக்குறணை பிதேச சபைத் தலைவர் இஸ்திஹார் இமாதுதீன் நடவடிக்கை

(கண்டி)

அக்குறணை பிரதேச சபை எல்லைக்குள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற குடும்பங் களில் கழிவறை வசதியில்லாத குடும்பங்களுக்கு கழிவறைகளை அமைக்க அக்குறணை பிதேச சபைத் தலைவர் இஸ்திஹார் இமாதுதீன் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத் துள்ளார்.

அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பின் படி இவ்வாறு 400இற்கும் மேற்பட்ட குடும்பங் கள் மலசலகூட வசதிகளின்றி வாழ்வதாக அறிய கிடைத்துள்ளது. இதனையடுத்து தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கையின்படி தனவந்தர்கள் மற்றும் பொது அமைப்புகளின் உதவியுடன் மேற்படி திட்டத்தை பிரதேச சபையின் அனுசரணையில் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அக்குறணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வர்த்தகர்கள், தனவந்தர்கள், பொது அமைப்புகள்



என்பவற்றின் கூட்டுமுயற்சியால் 30இற்கும் மேற்பட்ட மலசலகூடங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்தகட்டமாக மேலும் 40 மலசலகூடங்களை உடனடியாக நிர்மாணிப்பதற்கான முன்னெடுப்புகளை தமது தலைமையில் அக்குறணை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.






இந்தியாவின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு கண்டியிலுள்ள உதவி இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உதவி உயர்ஸ்தானிகர் திரேந்திர சிங் தலைமையில் இடம்பெற்றதுடன், இந்தியாவின் ஜனாதிபதி ஸ்ரீராம் நாத் கோவிந்துடைய அவர்களுடைய சுதந்திர செய்தியை உயர்ஸ்தானிகர் வாசித்தபோது... (கண்டி)

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.






# சிங்கை நகரும் நல்லூரும்



சிங்கை நகரைப்பற்றிச் சரித்திரவாராய்ச்சியறிஞர், சுவாமி ஞானப்பிரகாசர் பின்வருமாறு கூறுகின்றார்:

* "ஆதி ஆரியச்சக்கரவர்த்தி எடுப்பித்த யாழ்ப்பாண நகர் யாது? அது நல்லூராதல் கூடுமா? கூடாது" என்பர் ரீ. இராசநாயக முதலியார். இவ்வியுற்பத்திமானின் அனுமானப்படி பருத்தித்துறை கணித்தாய் மணல்மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமே பூர்வகாலச் சிங்கை நகராம். நல்லூர், புவனேகவாகுவெனப் பிற்படக் கோட்டை இராச்சியம் வகித்த செண்பகப்பெருமாள் பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டுவித்ததாம். இம்மதம் எமக்கும் சம்மதம். வல்லிபுர மணற் கும்பிகளுள் காற்றுக் காலங்களில் அகப்படும் பழம் பொருட்கள், அங்கு பலவிடங்களில் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆதியனவும் அங்கிருந்து கரை மார்க்கமாகப் போன பெரும் வீதியின் அடையாளங்களும் ஒருநாள் விஸ்தார நகராய் விளங்கியது எனக் கரதலாமலகமாய்க் காட்டும். அப்பால் ஆரியச் சக்கரவர்த்திகள் தம் செல்வாக்கு நிரம்பிய நாட்களில் பெருங் கப்பற் படையுள்ளோராய்ப் பிரக்யாதி பெற்றுள்ளமையினால், அம் மரக்கலத்திரள் ஆழியிற் சுலபமாய்ச் சென்று திரும்புவதற்கு அநுகூலமான துறைமுகம் உள்ளோராய் இருந்தமை அவசியம்.

கேகாலைப் பகுதியிலுள்ள கொத்தகமத்திற் கண்டெடுத்த கல்வெட்டும் அன்னோரைப் பொங்கொலிநீர்ச் சிங்கை நகர் ஆரியர் எனச் சூசிப்பிக்கின்றது. பெருங்கடற் சமீபமும் சிறந்த துறைமுகப் பொலிவும் பொருந்தக்கொண்டது வல்லிபுரமே.

"சிங்கை நகர் வல்லிபுரத்திலிருந்ததெனக் கொள்ளுதல் அமைவுடைத்தாயின், பறங்கிக்காரர் கி.பி. 1590இல் கொழும்புத்துறையிலிறங்கி நல்லூரைச் சருவியகாலையில், சிங்கைநகரெனும் பெயரோடு ஒரு பௌத்த அரணிருந்ததென பாதர் குவேறோஸ் கூறுகின்றமை எவ்வாறென ஓர் ஆசங்கை நிகழும்.

பூர்வ சிங்கைநகர் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்குமிடையிலாமெனக் கொள்ள வேறு சான்றில்லாமையால், அச்சிங்கைநகர் அழிந்துபட்டு நல்லூர் தலைநகராயின. பின், அப்பழைய நகர்ப் பெயரோடு ஓர் அரண் இங்கு விளங்கியதெனக் கொள்ளலாம் என்க.

"மேலே குறிப்பிட்டவாறு கி.பி. எட்டாம் நூற்றாண்டு தொடக்கம் சிங்கை நகரிலிருந்து அரசாண்ட கலிங்க அரசனாகிய உக்கிரசிங்கனும் அவன் வழியினரும் சிலகாலம் பிறர் ஆட்சிக்குட்படாமலும் சிலகாலம் சோழ அரசுக்கும் பொலனறுவை அரசுக்கும் கீழடங்கியும் சிங்கை நகரில் அரசுபுரிந்து வந்தார்கள். இவர்கள் இராமேஸ்வரத்துப் பிராமண அரசகுடியிற் சம்பந்தஞ் செய்த பின், ஆரியவரசர் எனும் நாமம் புனைந்து இராமேஸ்வரத்தையும் தம் ஆளுகைக்குட்படுத்தி, அதனால் சேதுகாவலன் எனப் புதுப்பெயரையும் புனைந்து, இடபக் கொடியும் சேதுலாஞ்சனையும் பெற்றவர்களாய் பரராசசேகரன், செகராசசேகரன் எனும் சிங்காசனப் பெயர்களை மாறிமாறியுடையவர்களாய் அரசு செலுத்தி வந்தனர்."

பேராசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்களின் கருத்தின்படி ஆரிய சக்கரவர்த்தி பாண்டிநாட்டுத் தண்டத் தலைவனாவான்:

* "பின்பு பாண்டி நாட்டில் மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 125 - 1301) பட்டத்திற்கு வந்ததும் இலங்கைக்குத் தளபதியாக ஆரிய சக்கரவர்த்தி என்னுந் தண்டத்தலைவனை அனுப்பினான். அவன் நாட்டை மேற்பார்வையிட்டுக் கொண்டு வட இலங்கையிலேயே தங்கினான். இவனிலிருந்தே யாழ்ப்பாணத்தெழுந்த புதிய அரச பரம்பரை தோன்றியிருத்தல் வேண்டும். இவனுக்குப் பின் வந்த யாழ்ப்பாணத்து மன்னர் யாவரும் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் அரச பட்டப் பெயரைக்கொண்டு விளங்கினர்."

செகராசசேகரன் :

கி.பி. 1380ஆம் அண்டளவில் செயவீரசிங்கை ஆரியன் என்பவன் செகராசசேகரன் (ஐந்தாவது) என்னும் பட்டத்துடன் அரசனானான். இவனே செகராசசேகரம் என்னும் வைத்திய நூலையும், செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலையும், காரிவையாவின் கணக்கதிகாரம் என்னும் நூலையும், இயற்றுவித்தவன். தட்சண கைலாச புராணமும் இவன் காலத்திலேயே ஆக்கப்பட்டது. யாழ்ப்பாணத்த அரசர் பலருள்ளும் இச் செயவீரனே நடுநிலை தவறாத செங்கோற் சிறப்பாலும் படைவலியாலும் செந்தமிழ் அறிவாலும் சிறந்தவன்.

செகராசசேகரன் என்னும் பட்டப் பெயர் புனைந்த மற்றைய அரசர்களின் பெயர்கள் வழக்கிழந்தொழிய இவன் பெயர் மாத்திரம் மிகச் சிறந்து புகழ்பெற்று நின்றமையால் பிற்காலச் சரித்திரக்காரர் செகராசசேகரன் ஒருவனே என்று எழுதிவிட்டனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க...)






(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி.பி. 1414ஆம் ஆண்டளவில் செயவீரன் சகோதரன் குணவீர சிங்கையாரியன், பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனானான். இவனுக்குப் பின் இவன் மகன் கனகசூரிய சிங்கையாரியன் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்கை நகரில் ஆட்சிபுரிந்து வந்தான். அக்காலத்தில் (ஜயவர்த்தனபுரம்) கோட்டையை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு தனது வளர்ப்புப் பிள்ளையாகிய செண்பகப்பெருமாளை (சப்புமால் குமாரய) ஒரு சேனையுடன் அனுப்பினான்.

செண்பகப்பெருமாள் :

இந்தச் செண்பகப்பெருமாள் ஆறாம் பராக்கிரமபாகுவின் தத்தபுத்திரனாவான் என்பது முதலியார், செ. இராசநாயகம் அவர்கள் கருத்தாகும். இவனைப்பற்றி முதலியார் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

"கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகு சபைக்கு மலையாளத் தேசத்திலிருந்து பணிக்கன் ஒருவன் வந்தான். அவனை அரசன் உபசரித்து, அவன் தேகவலியாலும் வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய், தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். இப் பணிக்கனுக்குச் செண்பகப்பெருமாள் (சப்புமால் குமாரய), ஜெயவீரன் (அம்புலகலகுமாரய) என இரு குமாரர்கள் பிறந்தார்கள். பராக்கிரமபாகு தனக்குப் புத்திரர்கள் இல்லாமையால் இவர்களைத் தனது தத்த புத்திரர்களாக வைத்து வளர்த்துவந்தான். இங்ஙனமாக, பராக்கிரமபாகுவின் மகள் உலகுடையதேவி நன்னூர்த் துணையார் என்பவனை மணந்து



ஜெயவீரன் என்னும் மகனை ஈன்றாள். இந்நிகழ்ச்சி பராக்கிரமபாகுவின் எண்ணங்களை மாற்றிவிட்டது. தான் இறந்தபின் தத்து புத்திரர்களில் ஒருவன் இராச்சியத்துக்குவரின் தன் பேரப்பிள்ளைக்கு அரச பதவி இல்லாது போய்விடும் என்ற அச்சத்தால் பராக்கிரமபாகு அவ்விரு குமாரர்களையும் அகற்றவேண்டுமென எண்ணி, வன்னியர்களை யடக்கி, யாழ்ப்பாண அரசனையும் வென்று வருமாறு செண்பகப்பெருமாளை அனுப்பினான். இவர்கள் உயிருடன் திரும்பமாட்டார்கள் என்று பராக்கிரமபாகு கருதினான். செண்பகப்பெருமாள் பிரபலம்பெற்ற குதிரை வீரன். உருவத்தால் இராட்சதனைப்போலும் காத்திரமுடையவன். மகா பலங்கொண்டவன். தகுந்த படையுடன் வந்த இவன் கறுப்புக்குதிரை மீதமர்ந்து, எதிரி படையுட் புகுந்து அநேகரைத் தன் வாளுக்கிரையாக்கி, தமிழ்ச் சேனையைப் புறங்கொடுத்தோடச் செய்தான். போர்க்குடைந்த கனகசூரியன் தன் குடும்பத்தாருடன் இந்தியாவுக்கு ஓடித் திருக்கோவலூரிற் கரந்துறைவானாயினான்.

செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத் தலைநகருட் புகுந்து, மாடமாளிகைகளைத் தரைமட்டமாக்கி, அநேக அதிகாரிகளைச் சிறைப்படுத்தி அவர்களுடன் ஜயவர்த்தன கோட்டைகு மீண்டான். பராக்கிரமபாகு இவனை "ஆரிய வேட்டையாடும் பெருமாள்" எனப் புகழ்ந்து, யாழ்ப்பாணத்தையே அரசுபுரியுமாறு அனுப்பினான். பராக்கிரமபாகுவின் கபட சிந்தையை அறியாத செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணம் போய்ப் பழைய தலைநகர் பாழாய்விட்டமையினால், நல்லூரிலே கி.பி. 1450 ஆம் ஆண்டளவில் ஒரு புதிய நகர் எடுப்பித்துச் சிறீசங்கபோதி புவனேகவாகு என்னும் சிங்கள நாமத்தோடு பதினேழு வருடங்களாக அரசு செய்து வந்தான். இவன் யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்கள நாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைத்தது. இவ்வெற்றியைப் புகழ்ந்து "கோகிலசந்தேஸ" என்னும் குயில்விடு தூதுப் பிரபந்தம் தேவி நுவரையைச் சேர்ந்த இருகல் கலத்திலக்க பரிவேனாதிபதி எனும் பௌத்த குருவினால் இயற்றப்பட்டது."

செண்பகப்பெருமாள் ஆண்ட நகர் விசாலித்த தெருக்களும், உப்பரிகை பொருந்திய வீடுகளும், மாளிகைகளும், இராமன் கோயில் முதலிய கோயில்களும் உள்ளதாக இந்நூல் கூறுகின்றது.












# வழிபாட்டுத் திருத்தலங்களில் தனித்துவமானதாக விளங்குவது நல்லூர் கந்தசுவாமி ஆலயம்

ஈழத்தின் வரலாற்றுப் புகழ்பூத்த முருக வழிபாட்டுத் திருத்தலங்களில் முக்கியம் வாய்ந்ததும் தனித்துவம் மிக்கதுமானதாக விளங்குவதுதான் நல்லூர் கந்தசுவாமி ஆலயம். வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயம், கோட்டை இராஜ்ஜியத்தை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாகிய செண்பகப்பெருமான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி நல்லூரைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சிசெய்த காலப்பகுதியில் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

சிங்கைப் பரராசசேகரன் ஆட்சிக்காலத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை நடுநாயகமாகக் கொண்டு நான்கு எல்லைகளிலும் நான்கு ஆலயங்களாக வடக்கே சட்டநாதர் ஆலயமும், கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் ஆலயமும், தெற்கே கைலாசநாதர் ஆலயமும், மேற்கே வீரமாகாளி அம்மன் ஆலயமும் கட்டப்பட்டுள்ளன.

ஈழத்தில் கோயில் கொண்டுள்ள கதிர்காமக் கந்தனை கற்பூரக் கந்தன் என்றும், சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்றும், மாவைக் கந்தனை அபிஷேகக் கந்தன் என்றும் அழைப்பதுபோல நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தன் என்று அழைக்கும் மரபு நீண்டகாலமாக நிலவிவருகின்றமை சிறப்பானது.



இந்த ஆலயத்தின் கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகளில் வானளாவிய ரீதியில் உயர்ந்துநிற்கும் கோபுரங்கள் ஆலய வளர்ச்சிக்கான அடையாளங்களாக மெய்சிலிர்க்க வைக்கின்றன. இவற்றில் தெற்கு வாசல் வீதியில் 2011ஆம் ஆண்டு இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. அது இந்தியாவில் திருவண்ணாமலையில் அமைந்துள்ள கிளிக் கோபுரத்தை ஒத்தவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை அருணகிரிநாதர், கோபுரத்தில் ஏறி தற்கொலைக்கு முயன்றபோது முருகன் மயிலில் வந்து அவரைக் காப்பாற்றி அருள் புரிந்தார் என்றும், இதனால் கிளியாக மாறிய அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் கிளியாக இருந்து 16 ஆயிரம் திருப்புகழை பாடினார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. புராணங்களில் கூறப்பட்ட அக்கதையைக்கொண்டு இந்தக் கோபுரம் அமையப்பெற்றது.

இக்கிளிக் கோபுரத்தில் கிளி வாகனம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன், அதற்கு நேர் எதிரிலே அருணகிரிநாதருக்கு சிறிய ஆலயமும் கட்டப்பட்டுள்ளது. அதேவேளை, வடக்கு வாசலில் 2015ஆம் ஆண்டு கட்டப்பட்டு கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி செய்யப்பட்ட கோபுரமானது முருகன் குபேரனின் வடிவில் தோன்றியதை முன்நிறுத்தி அமையப்பெற்றிருக்கின்றது.

சைவப் பக்தகோடிகளை மெய்சிலிர்க்க வைக்கும் முருகப்பெருமானின் அருள்நிறை புராணக்கதைகளை அடியொட்டிய இராஜ கோபுரங்களை உடைய வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான வருடாந்த மகோற்சவத் திருவிழா ஜூலை மாதம் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

25 நாட்களைக்கொண்ட இந்த மகோற்சவத் திருவிழா 25ஆவது நாளில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். இதன்படி திருவிழாவின் முக்கிய விழாவான தேர்த்திருவிழா இன்று (ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி) வெகுவிமரிசையாக நடைபெறவிருக்கின்றது.

**தொகுப்பு:**
**(ஞா.பிரகாஸ் – இ.இராஜபிரசாந்தன்)**









# தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவில் நடந்தது என்ன?


திருகோணமலையில் இலங்கை தமிழரசுக் கட்சி செயற்குழுவினரின் சந்திப்பின்போது...

**- விசேட செய்தி**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்ட முறை தவறானது என்பதை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயற்குழு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. இதனால், எதிர்வரும் 29ஆம் திகதி வவுனியாவில் நடக்கும் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை ஆராய்ந்து நடவடிக்கையெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயற்குழு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் கூடியது.

இதன்போது, தமிழ் அரசுக் கட்சியின் ஒரு குழுவினரால் தேசியப்பட்டியல் ஆசனம் இரகசியமான முறையில் பெறப்பட்டது குறித்து ஆராயப்பட்டது.

அம்பாறைக்கு த.கலையரசனுக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்பட்டது குறித்து யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், அது வழங்கப்பட்ட முறை தவறானது என பலரும் சுட்டிக்காட்டினர். கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பங்காளிக்கட்சிகளுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக இது நடந்துள்ளது என்பதை பலரும் சுட்டிக்காட்டினர். மாவை சேனாதிராசா, கே.வி.தவராஜா, குலநாயகம் என பலரும் இதை சுட்டிக்காட்டினர்.

எனினும், வழக்கம்போல செயலாளர் துரைராசசிங்கம் சமாளிப்பு முயற்சியில் ஈடுபட்டார். அனைவருடனும்- கட்சித் தலைவருடனும் பேசித்தான் அந்த முடிவை எடுத்ததாக தெரிவித்தார்.

எனினும், மாவை சேனாதிராசா அதை மறுத்தார். தனக்கு இதுபற்றி தெரியாதென்றும், கட்சித் தலைவரான தனக்கு தெரியாமலே செயலாளர் நடந்துகொண்டது தவறு என்பதை சுட்டிக்காட்டினார்.

அங்கு கருத்து தெரிவித்த கே.வி.தவராசா, “இது அடிப்படை நெறிமுறைகளுக்கு முரணானது. தலைவர் சம்பந்தன் ஐயா நூற்றிச்சொச்ச வாக்கினால்தான் வென்றீர்கள். ஒருவேளை, நீங்கள் தோல்வியடைந்திருந்தாலும் இதுதான் நடந்திருக்கும். கட்சி முடிவுகளுக்கு அப்பால் தான்தோன்றித்தனமாக யார் இப்படி நடப்பது, இதன் பின்னணி யார் என்பதை முறையாக கண்டுபிடித்து நடவடிக்கையெடுக்க வேண்டும்'' என வலியுறுத்தினார்.

“தேசியப்பட்டியல் விவகாரத்தில் பிழையிருந்தாலும் அதை இங்கு விவாதித்து எதுவும் செய்யமுடியாது. அதை கட்சியின் மத்தியகுழுf; கூட்டத்திலேயே விவாதிக்கலாம். அப்படியெனில் எதிர்வரும் 29ஆம் திகதி அதை கூட்டி, செயலாளர் நடந்துகொண்ட விதம் சரியா என்பதை ஆராய்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்போம்'' என்று இங்கு சம்பந்தன் தெரிவித்தார்.

பின்னர் கட்சியின் தேர்தல் பின்னடைவு தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது, ஒரே மாவட்ட வேட்பாளர்களுக்கிடையிலான முரண்பாடுகள், எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் அதிக பணத்தை செலவிட்டதே தமது தோல்விக்குக் காரணமென கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

கூட்டமைப்பின் கட்சிகள் சம்பந்தப்படாத சுயாதீன குழுவொன்றை நியமித்து தோல்விக்கான காரணத்தை ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது. அந்த குழுவை எதிர்வரும் மத்தியகுழுவில் பிரேரிக்க தீர்மானிக்கப்பட்டது.




### அம்பாறை மாவட்டத்தில்

## போதைப்பொருள் பாவனையை ஒழிக்க நடவடிக்கை முன்னெடுப்பு

(பாண்டிருப்பு)

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் பொருட்டு அம்பாறை விசேட போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் குழுவினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சமீபகாலமாக அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

கூடுதலாக கேரள கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளது. அம்பாறை, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட சிலர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டும் இருந்தனர்.

இதேவேளை, சட்டவிரோத சாராய விற்பனையிலும் பலர் ஈடுபட்டுவருகின்றனர். அதிகமாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாகவும் இதனால் குடும்பங்களில் பிணக்குகளும், சமூகவிரோதச் செயல்களும் இடம்பெற்றுவருவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய நாடளாவியரீதியில் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கான விசேட பொலிஸ் மற்றும் இராணுவக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய சிவில் உடையிலும் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே, அம்பாறை மாவட்டத்தை போதைப் பொருளற்ற மாவட்டமாக வைத்திருப்பதற்கான செயற்திட்டத்தை அமுலாக்குவதில் விசேட போதைப்பொருள் ஒழிப்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

பிரதேச மட்டங்களில் இயங்கும் சமூக குழுக்கள் மற்றும் மதஸ்தலங்களின் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தொடர்பான விபரங்களை பொலிஸாருக்கு வழங்கி ஒத்துழைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

### வாகரை மாங்கேணி கடற்கரையில்

## மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழா நேற்று இடம்பெற்றது





(வாழைச்சேனை)

மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி வாகரை மாங்கேணி கடற்கரையிலுள்ள மரியன்னையின் திருச்சொருபம் அமைந்துள்ள இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. மட்டக்களப்பு குரு முதல்வர் அருட்பணி ஏ.தேவதாசன் அடிகளாரின் தலைமையில் மட்டக்களப்பு மறைமாவட்ட நிதிப்பொறுப்பளார் அருட்பணி எஸ்.ஜெயநிக்சன் அடிகளார் மற்றும் பங்குத் தந்தை அருட்பணி ஜெமில்ரன் இருதயநாதன் ஆகியோர் சேர்ந்து அன்னை மரியாள் திருவிழா திருப்பணியை சிறப்பாக நடத்தினர்.

திருவிழாவின் நிறைவில் மாதாவின் திருச்சொருபம் கடலில் எடுத்துச் செல்லப்பட்டு வணங்கப்பட்டு ஆசீர்வாதம் பெறப்பட்டது.

## கல்குடா ரயில் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு கல்குடா ரயில் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை மாலை மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு ரயிலுடன் கென்ரர் ரக வாகனமொன்று மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வாகனமானது தமது வேக கட்டுப்பாட்டை இழந்து ரயில்வே பாதுகாப்புக் கடவையையும் உடைத்துக்கொண்டு எதிரே வந்த ரயிலுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவித்தனர்.

இதன்போது மட்டக்களப்பு சேத்துக்குடாவைச் சேர்ந்த செபஸ்ரியன் அருள்நாதன் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டு–கல்முனை வீதி விபத்தில் மூவர் படுகாயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கல்லடி பிரதேசத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற வீதி விபத்தில் சிறுமி உட்பட மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடியில் காத்தான்குடி நோக்கிவந்த மோட்டார் சைக்கிளுடன் அதன் பின்னால் வந்து யூ வளைவில் திரும்ப முற்பட்ட சிறிய ரக மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறிய ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுமியும் மற்றொருவரும் காயமடைந்ததுடன், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இவர்கள் மூவரும் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளோட்டியின் அதிக வேகமே விபத்துக்குக் காரணமென தெரிய வருகிறது.

காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருக்கோவில் பாடசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிவைப்பு



(திருக்கோவில் )

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் 14 முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

மகளிர் - சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் ஊடாக உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி திட்டத்தின் கீழேயே இவ்வாறு முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, சமுர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம், பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.மோகனதாஸ், நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக உத்தியேகத்தர், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### சீனக்குடா பொலிஸ் பிரிவில்

## 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த மூவர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த மூவரை இம்மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.அன்பாஸ் நேற்று உத்தரவிட்டார்.

திருகோணமலை, மட்கோ, கூம்பூகார், பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 21, 30 மற்றும் 23 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இணைந்து திருகோணமலை கருமலையூற்று அண்டிய பகுதியில் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மூன்று சந்தேகநபர்களும் தலா இருபது மில்லிகிராம் வீதம் தம் வசம் வைத்திருந்த நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர்.

திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் இவர்களை முன்னிலைப்படுத்திய போதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## நோயாளிகளுக்கு மாத்திரை பொதிகள் அன்பளிப்பு



(சம்மாந்துறை)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நாளாந்தம் வரும் நோயாளர்களுக்கு மாத்திரை வழங்குவதற்காக சம்மாந்துறை பிரதேச சபையினால் முதல் கட்டமாக ஒரு தொகுதி மாத்திரை பொதிகள் வைத்திய அத்தியட்சகரிடம் அன்பளிப்பு செய்யப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச சபை பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் மற்றும் பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் ஆகியோரால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம். ஹனீபாவிடம் ஒரு தொகுதி மாத்திரை பொதிகள் கையளிக்கப்பட்டன.

இதில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எம்.எஸ்.சரீபா, வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் அப்துல் ஜப்பார், வைத்தியர்கள் மற்றும் தாதியர் மேற்பார்வை உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சீத்துவக்கேடு 49





காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

வயிறு சம்பந்தமான கன வருத்தங்களுக்கு வேப்பம்பூ சொன்ன சாமான் கண்டியோ. வேப்பம்பூவை சும்மா சப்பிச் சாப்பிட வயித்து நோ, சாமியாக் குணம், வாய்வுத் தொல்லை, ஏவறை விடுகிறது, பசியின்மை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகும். அது மட்டுமே வேப்பம் பூக்களை தண்ணியிலை கொதிக்க வைச்சு இறக்கி ஆற வைச்சு இளநியும் கலந்து ஒரு கிழமைக்கு குடிக்க வயித்துப் புண் எல்லாம் குணமாகும் எண்டுவார் அப்பு.

அதை மாதிரி வேப்பம்பூவை கொஞ்சம் சாடயா நெருப்பில வாட்டிப் போட்டு மோனை தலையிலை வைச்சுக் கட்டினா உந்த தலையில கூடு கட்டிக் குடும்பம் நடத்திற ஈர், பேன் பொடுகு எல்லாம் இல்லாமல் போறதோட தலைப் பாரம் குறையும். மயிரும் நல்லா வளரும் எண்டுவார்.

உடன நான் உவள் மலரிட்டை உந்த வேப்பம் பூவை நல்லா வைச்சுத் தோய் எண்டு சொல்ல வேணும் எண்டு நினைப்பன். ஏனென்டால், அவளின்ரை தலையில ஒரே ஈரும் – பேனும். எப்ப பாத்தாலும் புதை பொருள் ஆராச்சி செய்யிறவை மாதிரி தலையை கிளறிக்கொண்டே தலையும் கையுமாத்தான் இருப்பாள்.

வேப்பம்பூவைக் கொஞ்சத் தண்ணி விட்டுக் காய்ச்சி அதோட நெல்லிக்காய் சாத்தையும் தேனையும் கலந்து குடிச்சுக் கொண்டு வர தோல் நோய்கள் இல்லாமல் போகும். அதோட வேப்பம் பூவையும், எள்ளையும் அரைச்சுக் கட்டினால் எந்தவிதமான கட்டிகளும் உடனே உடைஞ்சிடும். மோனை அதுமட்டுமே காஞ்ச வேப்பம் பூவை தண்ணியில போட்டு ஊற வைச்சுக் குடிக்கவும் உந்த பசி இல்லாக் குணம், உடம்பு தளர்ச்சி, பித்தம் எல்லாம் நீங்கும் எண்டுவார்.

உது மட்டுமில்லையடா இண்டைக்கும் உங்க கன இடங்களிலை ஆக்கள் வேப்பம் பூவை குழம்பாவோ, வறையாவோ, ரசமாவோ சமைச்சு தின்னுகினம் கண்டியோ எண்டு அப்பு சொல்லுவார்.

வேப்பம்பூவில விற்றமின் ஈ நிறைய இருக்கிறதாலதான் தோல் பிரச்சினையளுக்கு அது நல்லம் எண்டும் அதோட அசாடிரக்சன் எண்ட அல்கலாய்டு இருக்கிறதால நுண்ணுயிர்க் கிருமிகளையும் தடுக்கும் எண்டும் இப்ப ஆராச்சி செய்து சொல்லுகினம் எண்டும் சொல்லுவார்.

ஆனால், உவங்கள் உப்பிடி ஆராச்சி செய்து சொல்லுறதுக்கு முந்தியே நாங்கள் பரம்பரை பரம்பரையா வேப்பம்பூ வடகம் செய்து சாப்பிட்டனாங்கள். உப்பிடி ஒவ்வொருநாளும் இயற்கையாகக் கிடைக்கிறதுகளை சாப்பிட்டால் ஒருத்தருக்கும் ஒரு வருத்தமும் வராது. டாக்குத்தரிட்டைப் போகவும் தேவை இல்லை. அவைக்கு காசைக் குடுத்து அழவும் தேவை இல்லை மோனை எண்டுவார்.

வேப்பம் இலையை எடுத்தம் எண்டால் மோனை முக்கியமா உந்தக் கொசு, நுளம்புகளைத் துரத்துறதுக்குத்தான் எங்கடை ஆக்கள் பாவிக்கிறவை. அதோட வீட்டிலை சாம்பிராணிப் புகை போடேக்கை காஞ்ச வேப்பம் இலையையும் போட்டு புகை பிடிச்சா உந்த கண்டறியாத கரைச்சல் தாற கிருமியள் எல்லாம் அழிஞ்சு போகும்.

வேப்பிலையிலுள்ள குயிர்சிடின் எண்ட ஓர் இரசாயனப் பொருள் பக்றீரியாக்களைக் கட்டுப்படுத்தும் எண்டு இப்ப ஆராச்சி செய்து சொல்லுறாங்கள் எண்டு அப்பு சொல்லுவார். அதாலதான் உந்த விஞ்ஞானியள் எல்லாம் வந்து உதுகளைச் சொல்ல முதலே நாங்கள் நூற்றுக்கணக்கான வருசங்களா வருத்தக்காறர் படுத்திருக்கிற இடத்திலையும் அதிலும் அம்மாள் வருத்தம் வந்தவை படுத்திருக்கிற இடத்திலையும் அவையின்ரை படுக்கைக்கு கீழ எல்லாம் வேப்பம் இலையை போட்டு விடுவம். அதால ஒரு கெட்ட கிருமியளும் அவையை அண்டாது.

முந்தி மன்னர் ஆட்சிக்காலத்தில சண்டையில காயம் பட்ட ஆக்கள் படுத்திருக்கிற இடத்தில கிருமித் தொற்று வராம இருக்க வேப்பம் இலைகளை சுத்திக் கட்டினதா பழைய பாட்டுகளிலை சொல்லிக் கிடக்கு மோனை.

அது மட்டுமே முந்தி நாங்கள் பிள்ளைத்தாச்சியள், குழந்தைப் பிள்ளையள் வெளியில போகேக்கை காத்தில இருக்கிற கிருமியள் தொத்தாம இருக்க வேணும் எண்டு வேப்பம் இலையை இடுப்பில கட்டிவிடுவம். அவையை கட்ட வைக்கிறதுக்காக வெளியில பேய் பிடிக்கும் அதால வேப்பம் இலை கட்டவேணும் எண்டு சொல்லுவம். இல்லாட்டில் அதுகள் வெளியிலை போகேக்கை வெக்கமா கிடக்கெண்டு கட்டாதுகள் எண்டுவார் அப்பு.

அதோட வேப்பம் இலை எண்டது ஓர் இயற்கையான பூச்சிக்கொல்லி அதாலதான் அந்து வந்து குந்தியிருந்து அரிசியை நெல்லைக் குடிக்காமல் இருக்கிறதுக்காக எங்கட வீட்டில இருக்கிற நெல்லு மூட்டையள் அரிசி மூட்டையளுக்கையும் வேற சாமான்களை மற்றப் பூச்சியள் வந்து அரிக்காம இருக்கிறதுக்காக பெட்டகங்களுக்கை றங்குப் பெட்டியளுக்கை கள்ளிப் பெட்டியளுக்கை எல்லாம் வேப்பம் இலையை போட்டு வைக்கிறனாங்கள் எண்டு ஆச்சி சொல்லுவா.

வீட்டு வாசலிலை வேப்பம் இலையைக் கட்டினால் காத்தில கலந்து மிதந்து வாற நுண்கிருமிகள் ஒண்டும் வீட்டுக்கை எட்டித்தன்னும் பாராம பறந்து போடுங்கள். முந்தி எங்கடை ஆக்கள் இலையை அரைச்சு களிம்பாக்கிப் புண்களை மாத்தவும், கட்டி வீக்கங்களை, கொப்புளங்களை உடைக்கவும் வைச்சுக் கட்டுவினம் அதோட உதை அப்பிடியே பூசினால் சொறி, சிரங்கு, படை, தேமல் மாதிரியான வருத்தங்களும் குணமாகும் எண்டுவார் அப்பு.

வேப்பிலை சாத்தை முகப்பருக்கள், கரும்புள்ளிகளின் மேல பூசினால் கெதியாச் சுகமாகும். உந்த பெயர் அண்ட் லவ்லி என்னமோ வாயில வராத பெயர்களிலை எல்லாம் வாற கண்ட கிரீம்களையும் பூசுறதை விட்டுப் போட்டு எங்கட குமரியள் உந்த வேப்பிலை சாத்தை பூசலாம் தானே எண்டுவா ஆச்சி.

உவள் மலரும் அப்ப முகத்தில என்னவோ பரு வந்திட்டுது எண்டு எச்சிலைப் பூசிக் கொண்டு திரியிறவள். ஒரு நாள் அவளின்ரை ஆச்சி அவள் எச்சில் பூசுறதைக் கண்டு போட்டு உதென்ன கோதரியையடி பூசுறாய் எண்டுபோட்டு அவளுக்கு உந்த வேப்பம் சாத்தைப் பூசி விட்டவ ரெண்டு நாளில்லை அந்தக் கட்டி இருந்த இடமும் தெரியாமல் போட்டுது .

ஒரு கைப்பிடி அளவு வேப்பிலையை ஒரு குடம் தண்ணியிலை போட்டு ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூளையும் போட்டு நல்லாக் கொதிக்க வைச்சு குளிச்சா தோல் நோய்கள் அவ்வளவும் தொலைஞ்சு போகும் எண்டு உந்தப் புத்தகங்களிலை போட்டிருக்கு எண்டு அப்பு சொல்லுவார்.

அதே மாதிரி வேப்பம் துளிரையும் மஞ்சளையும் அம்மியிலை அரைச்சு பாக்கு அளவிலை உருட்டி சாமத்தியப் பட்டப் பிள்ளையளுக்கு மூண்டு நாட்களுக்கு காலமையில குடுத்தா வயித்து நோ, சூதக வாயுப் பிரச்சினை பூச்சிப் பிரச்சினை எல்லாம் இல்லாமல் போகும் எண்டு ஆச்சி சொல்லுவா. அதோட வேப்பிலையை தண்ணி விட்டு கொதிக்க வைச்சு தேன் சேர்த்து வாய் கொப்பிளிச்சா தொண்டைப்புண் தொண்டை கட்டு எல்லாம் மாறும் அதோட பல்லுகளுக்கும் நல்லது எண்டுவா.



(தொடரும்)

---

# சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் எஸ்.பி.பி.

## உடல்நிலையில் முன்னேற்றம்





"பிரபல திரைப்பட பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச முன்னணி மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைப்படி, தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது" என எம்.ஜி.எம். மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட எஸ்.பி.பி. கடந்த 5ஆம் திகதி சென்னை எம்.ஜி.எம். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு உயிர்காக்கும் மருத்துவ உபகரணங் களின் உதவியுடன், தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. அவரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்றோ, நாளையோ, வேறு ஒரு பிரத்தியேக தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கான சிகிச்சையை கவனிக்க பொதுமருத்துவம், இருதய நோய், அவசர சிகிச்சை, நுரையீரல், சிறுநீரகத்துறை, தொற்றுநோயியல், 'இன்டர்னல் மெடிசின்' நிபுணர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் முன்னணியில் இருக்கும், அமெரிக்காவின், மினியாபொலிஸ் பகுதியிலுள்ள 'மாயோ கிளினிக்' மற்றும் யுனிவர்சிட்டி ஒவ் டெக்சாஸ் மெடிக்கல் சென்டரைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் மும்பை, டில்லியைச் சேர்ந்த தலா இரு மருத்துவ நிபுணர்களைக்கொண்ட ஆலோசனைக் குழுவினர், 'வீடியோ கொன்பரன்ஸ்' வாயிலாக எம்.ஜி.எம். மருத்துவக் குழுவினருடன் தொடர்பில் உள்ளனர். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் பாலசுப்ரமணியத்தின் உடல்நிலையை குறிப்பாக, இருதயத் துடிப்பு, இரத்தத்தில் ஒட்சிசன் அளவு உள்ளிட்டவற்றை கண்காணிக்கும் உபகரணங்களின் இயக்கத்தை இந்த நிபுணர்கள் நேரடியாக பார்வையிட்டு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இதன்படி, அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை சிறப்பாக இருப்பதாகவும், அவரது உடல், சிகிச்சையை ஏற்று, முன்னேற்றத்துக்கான முழு ஒத்துழைப்பை அளித்துவருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான இரசிகர்களின் வேண்டுதலால், எஸ்.பி.பாலசுப்ரமணியம் பூரண குணமடைந்து விரைவில் வீடு திரும்புவார். அதுவே, அனைவரின் பிரார்த்தனையும் கூட!

### மனைவிக்கும் கொரோனா

எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் மனைவி சாவித்திரி, கொரோனா தொற்றுக்காக, அதே எம்.ஜி.எம். மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். அதேவேளை மகன் சரண், வீட்டில் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

# ஒரு நாளைக்கு 12 முறை பொய் சொல்லும் ட்ரம்ப்



"பொதுமக்களிடம் கூறிய பொய்களுக்கு என்றாவது வருந்தியது உண்டா?" என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தர்மசங்கடத்துக்குள்ளாக்கியதால், அந்தக் கேள்வியை அவர் புறக்கணித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பத்திரிகையாளர் சந்திப்பின்போதும், பொதுமக்கள் உரையின் போதும் ஏராளமான பொய்யான செய்திகளையும் தவறான தகவல்களையும் அளிப்பதாக அவர்மீது எப்போதுமே விமர்சனம் உண்டு.

கடந்த சில வருடங்களில் மட்டும் டிரம்ப் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளதாக வொஷிங்டன் போஸ் தகவல் வெளியிட்டுள்ளது. ஒரு நாளில் அவர் 12 முறையாவது பொய்யான தகவல்களைக் கூறிவிடுகிறார். கொரோனா பரவல் தீவிரமாகப் பரவத் தொடங்கிய கடந்த சில மாதங்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறை தவறான தகவல்களைக் கூறியுள்ளதாக வொஷிங்டன் போஸ்ட் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது 'ஹஃபிங்டன் போஸ்ட்' செய்தியாளர் ஷிரிஷ் டேட் என்பவர் ஜனாதிபதி ட்ரம்பை நோக்கி, "ஜனாதிபதியாகப் பதவி வகித்த மூன்றரை ஆண்டுகளில் அமெரிக்க மக்களிடம் கூறிய பொய்களுக்கு வருந்தியதுண்டா?" என்று கேள்வியெழுப்பினார்.

திடீரென்று, எதிர்பாராத நேரத்தில் தர்ம சங்கடமான கேள்வியை எதிர்கொண்ட ட்ரம்ப் அமைதியானார். பத்திரிகையாளரின் செய்திக்கு பதிலளிக்க மறுத்தார் ட்ரம்ப். பத்திரிகையாளர் மீண்டும் அந்தக் கேள்வியை எழுப்ப, அந்தக் கேள்வியைப் புறக்கணித்த ட்ரம்ப் அடுத்த கேள்விக்குத் தாவிவிட்டார். இந்தக் கேள்வி குறித்து ஷிரிஷ், "டிரம்பிடம் இந்தக் கேள்வியைக் கேட்க 5 ஆண்டுகள் காத்துக்கொண்டிருந்தேன்" என்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

---

# பிரணாப் முகர்ஜியின் உடல்நிலையில் முன்னேற்றமில்லை



முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. தொடர்ந்தும் அவர் வென்டிலேட்டர் ஆதரவில்தான் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

84 வயதான பிரணாப் முகர்ஜி கடந்த 9ஆம் திகதி தனது வீட்டு குளியலறையில் தவறிவீழ்ந்த நிலையில் டில்லி ஆர்.ஆர். இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவரது மூளையில் இரத்தம் உறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து மருத்துவர்கள் 5 மணி நேரம் அறுவைசிகிச்சை மேற்கொண்டு அதை அகற்றினர். எனினும், அறுவைசிகிச்சைக்குப் பின்னர் பிரணாப்பின் உடல்நிலை மோசமடைந்தது. எனவே, வென்டிலேட்டர் உதவியுடன் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

முன்னதாக மருத்துவமனையில் நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில், அவருக்கு தொற்று ஏற்பட்டிருப்பதும் உறுதிசெய்யப்பட்டது.

மேலும், பிரணாப்பின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்து வந்த நிலையில், வெள்ளியன்று அவர் நினைவிழந்து ஆழ்ந்த கோமா நிலையையடைந்தார். எனினும், அவரது முக்கிய உறுப்புகளின் செயற்பாடுகள் நிலையாக இருப்பதாக கூறிய மருத்துவமனை நிர்வாகம், அவருக்கு வென்டிலேட்டர் உதவியுடன் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

---

# ட்ரம்பின் இளைய சகோதரர் ரொபர்ட் காலமானார்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இளைய சகோதரர் ரொபர்ட் டிரம்ப் உடல்நலக்குறைவால் காலமானார்.

71 வயதான அவர், கடந்த சில மாதங்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், நியூயோர்க்கிலுள்ள மருத்துவமனையில் அண்மையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டார். அங்கு அவரின் உடல்நிலை மோசமான நிலையில் மருத்துவமனைக்குச் சென்று சகோதரரின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் ட்ரம்ப் கேட்டறிந்தார்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி ரொபர்ட் காலமானார். அவர் தனது சகோதரர் மட்டுமல்ல, நல்ல நண்பர் என்று இரங்கல் செய்தியில் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார். ரொபர்ட் டிரம்ப் என்ன நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என தெரிவிக்கப்படவில்லை.

# வித்தியாசமான முறையில் சர்வதேச அரங்கிற்கு ‘குட்பாய்’ சொன்னார் ‘தல’ டோனி

## அவரைத் தொடர்ந்து ‘சின்ன தல’யும் ஓய்வு

■ ஏ. அகில் சிஹாப்





> கட்டாயமாக ஒரு தலைவனுக்கு ஏனைய சக வீரர்களை அரவணைக்க தெரிந்திருக்கவேண்டும். அதை திறம்பட செய்துகாட்டுபவர் டோனி

உலகில் யாரும் நிரந்தரமாக வாழ்வது கிடையாது. கிரிக்கெட் உலகில் கோடான கோடி இரசிகர்களை தனது உணர்ச்சியால் கட்டிப்போட்ட மஹேந்திர சிங் டோனி தனது 39ஆவது வயதில் முழு சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கும் ‘‘குட்பாய்’’ சொல்லியுள்ளார்.

1981ஆம் ஆண்டு ரஞ்சியில் பிறந்தார் எம்.எஸ்.டோனி. 2004ஆம் ஆண்டு தனது 23ஆவது வயதில் இந்திய அணியில் ஒருநாள் சர்வதேச போட்டி மூலமாக சர்வதேச அரங்கிற்கு அறிமுகமான ‘தல’ என செல்லமாக அழைக்கப்படும் முன்னாள் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி திடீர் ஓய்வை அறிவித்து முழு இரசிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளார்.

தனது ஓய்வையே ஒரு வித்தியாசமான முறையில் அறிவித்த டோனி, “உங்களது அன்புக்கும் நன்றி. இன்று 19.29 மணி முதல் நான் ஓய்வு பெற்றுவிட்டதாக எண்ணிக்கொள்ளுங்கள்’’ என்று சமூக வலைத்தளம் மூலமாக அறிவித்தார். அந்த நொடியிலிருந்து பொழியத் தொடங்கியது. இரசிகர்களின் அன்பு மழை, இப்போது வரை பொழிந்துகொண்டே இருக்கிறது. காரணம், டோனி என்றால் எப்படிப்பட்டவர் என்பதை அனைவரும் அறிவர்.

கடந்த சில வருடங்களாக இந்திய அணியில் இளம் வீரர்களின் வருகையால் எம்.எஸ்.டோனிக்கு வாய்ப்புகள் கிடைக்காமல் இருந்துவந்த நிலையில், கடந்த ஒரு வருடமாக ஓய்வு தொடர்பான கேள்விகள் அவரிடம் வந்துகொண்டே இருந்தன. எதைப்பற்றியும் கவலைப்படாமல் எம்.எஸ்.டோனி தனது சொந்த வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

தன்னுடைய அணித்தலைமையில் காணப்படும் பொறுமை, திறமையின் மூலம் ‘கெப்டன் கூல்’ என பெயர்பெற்ற எம்.எஸ்.டோனி, எப்போதும் நாம் நினைக்காததை செய்யக்கூடிய தன்மை படைத்தவர். எதையும் வித்தியாசமாக செய்வார். அப்படித்தான் தற்போது தன்னுடைய ஓய்வையும் அறிவித்திருக்கிறார்.

இந்திய அணிக்கு ஒரு தலைசிறந்த அணித்தலைவராக விளங்கிய டோனி, இந்திய அணிக்கு அனைத்து ஐ.சி.சி. உலகக்கிண்ணங்களையும் வென்று கொடுத்தவராவார். கட்டாயமாக ஒரு தலைவனுக்கு ஏனைய சக வீரர்களை அரவணைக்கத் தெரிந்திருக்கவேண்டும். அதை திறம்பட செய்துகாட்டுபவர் டோனி. எப்படியான சிக்கல் நிலைகளிலும் கூட ஏனைய வீரர்களுக்கு ஆறுதல் கூறுவதில் டோனி போன்ற அணித்தலைமையை கிரிக்கெட் உலகில் காணவே முடியாது.

அப்படிப்பட்ட ஒரு தலைமையை இன்று முழு கிரிக்கெட் உலகமும் இழந்துள்ளது. டோனி போன்று இன்னுமொரு சிறந்த தலைவன் உருவாகுவாரா என்றால் அது கேள்விக்குறியே! 2007ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கு டோனி தலைமையை ஏற்றார். அன்றைய நாளிலிருந்து 2016ஆம் ஆண்டுவரை இந்திய அணியை தலைமை தாங்கி இந்திய அணிக்கு வென்றுகொடுத்துள்ள கிண்ணங்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்க முடியாது. 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை டெஸ்ட் அணியையும் வழிநடத்தியிருந்தார்.

எம்.எஸ்.டோனியின் தலைமையில் கிரிக்கெட் உலகில் மிக உயர்ந்த கிண்ணமான ஐ.சி.சி. உலகக்கிண்ணத்தை 2011ஆம் ஆண்டு, ஐ.சி.சி. இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத்தை 2007ஆம் ஆண்டு, ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தை 2013 ஆம் ஆண்டு, ஆசிய கிண்ணத்தை இரு தடவைகள் (ஒருநாள் வடிவத்தில் 2010ஆம் ஆண்டு, இருபதுக்கு இருபது வடிவத்தில் 2016ஆம் ஆண்டு), இந்தியன் பிரிமியர் லீக் தொடரை மூன்று தடவைகள் (2010, 2011, 2018), சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது தொடரை இரு தடவைகள் (2010, 2014) கைப்பற்றி இந்திய அணிக்கு பெயர் குறிப்பிட்டு சொல்லக்கூடிய கிண்ணங்களை வென்றுகொடுத்துள்ளார்.

அது மாத்திரமல்லாது 2010ஆம் ஆண்டு தனது தலைமையின்கீழ் இந்திய அணியை ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்துக்கு கொண்டுசேர்த்த பெருமையும் டோனியை சாரும். ஒரு அணித்தலைவராக மாத்திரமல்லாது, இந்திய அணிக்கு சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் எண்ணிலடங்காத வெற்றிகளை குவித்துள்ளார். 9 விக்கெட்டுகள் வீழ்த்தப் பட்டாலும் ‘‘தல டோனி இருக்கான்’’ என்ற நம்பிக்கையில் இறுதிவரை போட்டியை பார்க்க இரசிகர்கள் கூட்டம் காணப்படும்.

இதனால்தான் டோனிக்கு இன்னுமொரு பெயராக ‘பினிஷர்’ என்ற பெயரும் வைக்கப்பட்டது. கிரிக்கெட் உலகில் ஒவ்வொரு வீரர்களும் ஒவ்வொரு விதமான துடுப்பாட்ட விதத்தில் பெயர் பெற்றுள்ளனர். அந்தவகையில் எம்.எஸ்.டோனி ‘ஹெலிக்கொப்டர் ஷொட்’ என்ற பெயருக்கு பெயர்பெற்றவர்.

அணித்தலைமைப் பதவியை ஏற்பதற்கு முன்னர் 2006ஆம் ஆண்டு ஐ.சி.சி. ஒருநாள் வீரர்களுக்கான தரவரிசையில் எம்.எஸ்.டோனி முதலிடத்தை தக்கவைத்திருந்தமையும் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

ஒரு அணித்தலைவர், துடுப்பாட்ட வீரருக்கப்பால் ஒரு சிறந்த விக்கெட் காப்பாளராகவும் கிரிக்கெட் உலகுக்கு அறிமுகமான நாள் முதல் ஓய்வுபெறும் நாள் வரையில் பல விசித்திரமான ஆட்டமிழப்புகளை நிகழ்த்தியுள்ளார்.



டோனி விக்கெட் காப்பாளராக களத்தில் நின்றால் துடுப்பாட்ட வீரர்கள் ஓடி ஓட்டங்களை பெற அச்சப்படுவார்கள். காரணம், டோனி எத்திசையிலிருந்து எப்படி எறிவார் என்பதே தெரியாது. 2005ஆம் ஆண்டு இலங்கை அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் டெஸ்ட் அறிமுகம் பெற்ற எம்.எஸ்.டோனி 2014ஆம் ஆண்டுவரையில் இந்திய அணிக்காக 90 டெஸ்ட் போட்டிகளில் 4,876 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 33 அரைச்சதங்களும் 6 சதங்களும் உள்ளடங்கும். அதிகபட்சமாக 224 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

2006ஆம் ஆண்டு இருபதுக்கு இருபது போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் 2019ஆம் ஆண்டு வரையில் 98 போட்டிகளில் 1,617 ஓட்டங்களை குவித்ததுடன், இரண்டு அரைச்சதங்களும் பெற்றுள்ளார். 2004ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணியுடன் ஒருநாள் சர்வதேச அறிமுகம் பெற்ற டோனி, ஓய்வு வரையில் 350 போட்டிகளில் விளையாடியுள்ளார். மொத்தமாக 10 ஆயிரத்து 773 ஓட்டங்களை அடித்துள்ளார். இதில் 10 சதங்களும், 73 அரைச்சதங்களும் உள்ளடங்கும். அதிகபட்சமாக 183 ஓட்டங்களை விளாசினார்.

டோனி இறுதியாக விளையாடிய 2019 ஐ.சி.சி. உலகக்கிண்ணத்தின் அரையிறுதி போட்டியின்போது ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தமை இன்றும் கண்களில் உள்ளது. அனைவரும் மிகப்பெரியதொரு பிரியாவிடை கொடுத்து வழியனுப்புவார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால், தனது எளிமையை மீண்டும் நிரூபித்துள்ளார் தல தோனி.

### ரெய்னாவின் ஓய்வு

இதேவேளை, டோனி ஓய்வை அறிவித்திருந்த ஒருசில நிமிடங்களில் ‘சின்ன தல’ என அழைக் கப்படும் இந்திய அணியின் மற்றுமொரு அனுபவ வீரரான சுரேஸ் ரெய்னா, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். டோனியின் பாணியில் தன்னுடைய ஓய்வையும், சுரேஸ் ரெய்னா அறிவித்தார்.


சுரேஸ் ரெய்னா தனது இன்ஸ்ராகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள ஓய்வு பதிவில், “உங்களுடன் (டோனியுடன்) விளையாடும்போது, மிகவும் மகிழ்ச்சியாக உணர்வேன். அதற்கு மத்தியில் நான் ஒன்றும் இல்லை. எனது உள்ளத்தின் முழு பெருமையுடன் உங்களின் (டோனியின்) பாதையை தொடர முடிவெடுத்துள்ளேன். இந்தியாவுக்கு நன்றிகள்’’ என பதிவிட்டார்.

முக்கிய வீரர்களான டோனி, ரெய்னா ஆகியோர் அடுத்தடுத்த நிமிடங்களில் ஓய்வை அறிவித்தாலும், தொடர்ந்தும் லீக் போட்டிகளில் விளையாடவுள்ளார்கள். அதனடிப்படையில் அடுத்த மாதம் ஆரம்பமாகின்ற ஐ.பி.எல். தொடரில் இருவரும் ஒரே அணியில் களமிறங்கவுள்ளார்கள். இதை முழு கிரிக்கெட் உலகமும் எதிர்பார்த்துள்ளது.

*(இது, எம்.எஸ்.டோனியின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் ஓய்வை முன்னிட்டு விசேடமாக வெளியிடப்பட்ட கட்டுரையாகும்.)*

# தீவிர சிகிச்சைப் பிரிவில் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சேத்தன் சவுகானின் உடல்நிலை மோசமடைந்துள்ள நிலையில், அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



73 வயதுடைய இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சேத்தன் சவுகான் 40 டெஸ்ட் போட்டிகளிலும், 7 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் இந்திய அணிக்காக விளையாடியுள்ளார். கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அரசியலில் தன்னை இணைத்துக்கொண்டார். உத்தரப் பிரதேசத்தில் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசில் அமைச்சராகவும் உள்ளார். இந்நிலையில், கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் லக்னோவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்ததைத் தொடர்ந்து மற்றுமொரு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், அவருக்கு பல உறுப்புகள் பாதிப்படைந்துள்ள நிலையில், அவருக்கு வென்டிலேட்டர் கருவி பொருத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# விளையாட்டு

thamilansports@yahoo.com

தொகுத்தி – அகீல்

## ஓய்வு முடிவை திரும்பப் பெற்று மீண்டும் விளையாடவேண்டும்

### - யுவராஜிடம் கோரிக்கை



இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் கடந்த ஆண்டு அறிவித்த ஓய்வு முடிவை திரும்பப்பெற்று, மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவேண்டும் என பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

யுவராஜ் சிங் புற்றுநோய் காரணமாக அவதிப்பட்டு இந்திய அணியிலிருந்து விலகியிருந்தார். தொற்று நோயிலிருந்து குணமடைந்து மீண்டும் இந்திய அணியில் ஆடுவதற்கு இடம் கிடைத்தது. இறுதியாக 2017ஆம் ஆண்டு இந்திய அணியில் யுவராஜ் சிங் விளையாடினார். பின்னர் இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வந்தார். இறுதியாக 2019ஆம் ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். இது பலரையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்நிலையில், யுவராஜ் சிங் தனது ஓய்வு முடிவிலிருந்து விலகிக்கொண்டு மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண்டும் என பஞ்சாப் கிரிக்கெட் வாரியத்தின் செயலாளர் புனாலி தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், “யுவராஜ் சிங் தனது ஓய்வு முடிவிலிருந்து வெளியே வரவேண்டும் என்று சில தினங்களுக்கு முன்பு அவரிடம் நாங்கள் தெரிவித்தோம். அவர் இதற்கு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறார். மீண்டும் கிரிக்கெட் விளையாட வேண்டும். பஞ்சாப் அணிக்கு ஆலோசகராகவும் அவர் வரவேண்டும்’’ - என்றார்.

மேலும் கூறிய அவர், “டெஸ்ட் போட்டிகளில் அவர் ஆடவில்லையென்றாலும் குறைந்தபட்சம் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளிலாவது ஆடவேண்டும். அவரது பதிலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்’’ எனவும் கூறினார்.

# நீங்கள் உருவாக்கிய உணர்வுகளை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்!

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேந்திர சிங் டோனி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு



அறிவித்ததை தொடர்ந்து அவரது மனைவி சாக்‌ஷி சமூக வலைத்தளத்தில் இவ்வாறு உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

“நீங்கள் சாதித்ததைப் பற்றி நீங்கள் பெருமைப்பட வேண்டும். விளையாட்டுக்கு உங்களது மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியதற்கு வாழ்த்துக்கள். சாதனைகளுக்குரிய நபராக இருக்கும் உங்களை குறித்து நான் பெருமைப்படுகிறேன்.’’

“விரும்பிய இவ்விளையாட்டிலிருந்து விடைபெறும்போது நீங்கள் எவ்வளவு கண்ணீரை கட்டுப்படுத்தி இருப்பீர்கள் என்று அறிவேன். உங்களுடைய ஆரோக்கியம், மகிழ்ச்சியை விரும்புகிறேன், இனி பல அற்புதமான விடயங்கள் முன்னே உள்ளது“ என பதிவிட்டுள்ளார். மேலும், “நீங்கள் சொன்னதை மக்கள் மறந்துவிடுவார்கள், நீங்கள் செய்ததை மக்கள் மறந்துவிடுவார்கள், ஆனால் நீங்கள் உருவாக்கிய உணர்வுகளை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.“ எனவும் உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7